உலகு 1 ஆகஸ்ட 07 – மார்ச் 08 பனிமடல் 6

மதுரை சீடு குழந்தைகள் வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதுயுகம்

மகத்தான உலகை கற்பனைகளால் காப்போம்



*Let's rise & build up our SEED*



*They are the ocean of love, breath of seed soul*

கற்பனையே நம் வாழ்வு!

## MADURAI SEED



*We never get tired, till we have your support*

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு டிரஸ்ட் வழிகாட்டலால் சீடு குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது.


YOUNGWORLD

# Tribute to folk art

**Music and dance marked the celebrations.**

S.S.KAVITHA

Religious fervour pervaded the Gandhi Museum when M. Suresh Rajan and M. Marimuthu, got on the stage to perform the Shiva-Kali Dance. They brought the roof down with their folksy tunes. Suresh Rajan and Marimuthu, who are pursuing plus-two from a private tuition centre and at Ilango Corporation Higher Secondary School, were able to join hands at the Vannmukil Kalai Vizha, a function organised by Madurai Seed, a city-based non-governmental organisation working with children.



CELEBRATION: *Through dance*

## Fun day

The whole day children worked with various forms of folk forms. The children and youth in the age group of five to 20 who were part of the Kalai Kuzhu of the NGO organised the Vizha to exhibit their knowledge on folk dance forms besides celebrating the institution day and ninth anniversary of the NGO.

The children also staged mimicry programmes besides dancing to western tunes.

The aim of the programme was to create awareness on various folk art forms that are being neglected for various reasons, said A S Karthik Bharathi, managing trustee, Madurai Seed. "The programme was organised by children for children under the guidance of youth," he said and added that they had themselves compered the programme with appropriate details and introduction to every dance form that was staged by the students.

நன்றிகள்

திருமிகு. ஆரோக்கியசாமி ஆடிட்டர், மதுரை
CESCI
HONEY WELL, [illegible], மதுரை
திருமதி. [illegible] HONEY WELL
திருமிகு. [illegible] ஹைதராபாத்
திருமிகு. [illegible] வாரணாசி
திருமதி. லதா, [illegible]
திருமிகு. S.முத்துக்குமார்
திருமிகு. [illegible] சேகரன், சக்தி விடியல்
திருமிகு. V.கருப்பையா, [illegible] வார்டு மாமன்ற உறுப்பினர்
டாக்டர். T.ஆடம்ஸ், சீடு கல்வி மையங்களின் தந்தை

புதுயுகம் ஆசிரியர் குழு



மணநாள் வாழ்த்துக்கள்



மு. மன்சூர் அலி – முஸ்தகீம்

அச்சிட்டோர்
ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ்,
சி.எஸ்.ஐ.சர்ச் பின்புறம், மதுரை.
போன் : 3256908, 2524/34, 9865935571

நன்றிகள்



உ.கௌதமன் Ph.D.

அன்பு வாசக நெஞ்சங்களே!

வணக்கம்! நெடிய இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் புதுயுகம் உங்கள் கரங்களில் தவழ்கிறது. பொருளாதாரச் சூழல் மற்றும் தொடர் நிகழ்வுகளின் காரணமாகவும், புதுயுகம் குழந்தைகளே 100% தயாரித்து வழங்குவதாலும், மாதந்தோறும் இதழ் வெளியிடுதல் என்பதை நெகிழ்வாக வைத்துக் கொள்ளலாம் என்று சீடு குழந்தைகள் பேரவை புதிய நிர்வாகக் குழுவும், புதுயுகம் இதழ் குழுவும் முடிவு செய்துள்ளன. மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ, நான்கு மாதத்திற்கு ஒரு முறையோ வெளியிடலாம் என்பவை பரிசீலனையில் உள்ளன. கோடை விடுமுறை, மதுரை சித்திரைத் திருவிழா, சித்திரைப் பொருட்காட்சி.. என இவ்வாறான குதூகலத்திற்கிடையே புதுயுகம் இதழ் வெளிவருவதில் எங்களுக்கு மகிழ்ச்சி. விடுமுறை பயனுள்ளதாய் அமைய வாழ்த்துகின்றோம். இதழை முழுமையாக வாசியுங்கள். உங்கள் கருத்துக்களை எங்களுக்கு அனுப்புங்கள்.

ச. கற்பகஜோதி,
ஆசிரியர் குழுவிற்காக

நான் சீடு மையத்துக்கு வந்ததனால்...

நான் சீடு மையத்துக்கு வந்ததனால் நன்றாக படிக்க முடிகிறது. பல புதிய நண்பர்களிடம் பழக முடிகிறது. பல [illegible] சிறப்பான [illegible] பல [illegible] அறிய முடிகிறது. நூலகம் [illegible] பொது அறிவு [illegible] படிக்க முடிகிறது. [illegible] பல்வேறு [illegible] [illegible] பற்றி அறிய முடிகிறது. [illegible] முடிகிறது. பல விளையாட்டுகளை விளையாட முடிகிறது. [illegible] மாணவர் [illegible] [illegible] முடிகிறது. மாணவர்கள் திறமை [illegible] முடிகிறது. [illegible] [illegible] அறிய முடிகிறது. [illegible] பயனுள்ளதாக மாற்றியமைத்தோம். [illegible] [illegible] அறிந்து [illegible] [illegible] [illegible]. அந்த [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] நல்ல மனிதனாக வாழ முடிகிறது.

by.
D. [illegible]
XII

- "தூங்காநகரம்" என்றும் "கூடல் மாநகரம்" என்றும் புலவர்களால் மதுரை பெருமைப்படுத்தி பாடப்படுகிறது.
- "மதுரம்" என்பது மருவி மதுரை என்று பெயர் வந்தது என்ற கருத்து உள்ளது.



- மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத்தில் மக்கள் அனைவரும் மறக்காமல் கண்டு அதிசயிக்கப்படும் சங்கீதத் தூண்கள் உள்ளன. ஒரே கல்லில் செதுக்கி எடுக்கப்பட்ட கருங்கல் தூணில் மரக்கட்டையால் மெதுவாகத் தட்டினால் ஏழு சுரங்களையும் கேட்கக் கூடியதாக உள்ளன.

# ஐயா அர்ச்சுனன் என்னும் உழைப்பாளி



கரும்பாலை பகுதியில் அநேகரால் அறியப்பட்டவர் ஐயா அர்ச்சுனன் மதுரையில் மிகச்சிறந்த கட்டட கலைஞராகவும், கட்டட காண்ட்ராக்டராகவும் விளங்கிய ஐயா விருதுநகர் மாவட்டம் திருச்சுழியை பூர்வீகமாய்க் கொண்டவர். மதுரை, தல்லாகுளம் வடக்குத் தெருவில் வாழ்ந்து செழித்தவர்களான ஆதிமூலம் பிள்ளை நாகம்மை தம்பதிகளின் இளைய மகனான அர்ச்சுனன், விருதுநகர் மாவட்டம் புலியூரான் கந்தசாமிபிள்ளை - அம்மாபிள்ளை தம்பதிகளின் மகளான சண்முகத்தம்மாளை மணங்கொண்டார். பொருளாதார சூழல் மற்றும் குடும்ப சூழல் காரணமாக மிகவும் பின்தங்கிய பகுதியான கரும்பாலையில் தனது வாழ்விடத்தை மாற்றிக் கொண்டவர். கடந்த 40 வருடங்களாக கரும்பாலையில் வாழ்ந்த திருமிகு. அர்ச்சுனன் 17.11.2007 அன்று ஸ்ரீ அரவிந்தோ அன்னை அமரத்துவமான நாளில் தனது வாழ்வு நிலையில் பூரணத்துவம் பெற்றார்.

7 குழந்தைகளுக்குத் தந்தையான அர்ச்சுனன் கோடிக்கணக்கான இந்திய தந்தையர்களைப் போல் வாழ்வை வறுமைச் சூழலில் நித்தம் போராடி சந்தித்தவர். தனது வாழ்நாளில் 5 குழந்தைகளின் மங்கல விசேஷங்களை கண்டவர். தான் உணவுற்ற பிறகும் தனது தொழிலில் சளைக்காது உழைத்தவர். ஆறு மாதங்களாக உடல் பலவீனத்தால் நலிவுற்ற போதும் சீடு குழந்தைகளிடம் பெருத்த அன்பு கொண்டிருந்தார். அவருடைய வாழ்விடத்தின் ஒரு பகுதியில் குழந்தைகள் அரங்கம் இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 9 1/2 ஆண்டுகளாக ஐயாவுக்கும் சீடுக்கும் நெருங்கிய உறவு இருந்தது.

கரும்பாலை நடுத்தெரு சீடு மைய கதவுகள், அலமாரிகள், சீடு நூலகங்களுக்கு பைண்டிங் வேலைகள், கரும்பாலை கிழக்குத்தெரு சீடு மையம் அமைய உதவியமை, கரும்பாலை கிழக்குத்தெரு சீடு மைய வரி நிலைவாங்கள், சுவர்கள் பராமரிப்பு, கட்டடங்கள் கட்டியது, சாமக்குடி சீடு மைய சுவர்கள் பராமரிப்பு, கட்டடங்கள் கட்டியது, நத்தனேரி சீடு மைய சுவர்கள் பராமரிப்பு, கட்டடங்கள் கட்டியது, ஏராளமான சீடு விருந்துகளுக்கு சமைத்தது, வெளிநாட்டவர் வருகை நிகழ்ச்சிக்கு திட்டமிடலில் உதவியது, சீடு செந்தமிழ் நூலக வடிவமைப்பிற்கு உதவியது என திருமிகு. அர்ச்சுனன் சீடு மைய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் கணக்கிலடங்காதது.

மகாபாரத கதைகள் கூறுவதில் வல்லவர். அவரின் பூர்விக கோயிலில் அவரின் வீரவேடம் புகழ்பெற்றது. எண்ணற்ற கோயில்களை வடிவமைத்து கட்டியுள்ளார். 5ஆம் வகுப்புவரை பயின்ற அர்ச்சுனன் பிள்ளை படித்த கட்டட பொறியாளர்களுக்கு சமமாக கட்டட வரைபடங்கள் வரைவதிலும், கணக்குகள் போடுவதிலும் வல்லவர். கடைசி வரை உழைத்து வாழவேண்டும் என்ற வைராக்கியத்தில் வெற்றி கண்டவர்.

பழமையின் பால் நம்பிக்கை கொண்டிருந்த போதிலும் எண்ணற்ற சக கட்டட கலைஞர்களை வளர்த்தெடுத்தவர். சீடு அ.ச.கார்த்திக் பாரதி அவர்களின் தந்தையான திருமிகு. அர்ச்சுனன் மதுரை சீடு வருகையை யொட்டிய 10 ஆண்டுகளில் மிகச்சிறந்த சமூக நல்லிணக்க வாதியாக திகழ்ந்தார் என்பதை சீடு குழந்தைகள் அனைவரும் அறிவர்.

26 ஆண்டுகள் தொடர் சபரிமலை யாத்திரை கண்ட திருமிகு. அர்ச்சுனனுக்கு மரணம் வந்தபோது வயது 68 தான். மருத்துவ செலவினம் மற்றும் உடல் பலவீனம் ஆகிய இரண்டும் அவரை வென்றது. சீடு அறக்கட்டளை குழந்தைகளும் தொண்டர்களும் அவரை வெகுவாக

நேசித்தனர். நகைச்சுவை உணர்வு, கதை சொல்லும் திறன் கொண்ட அவருடன் பழகிய காலங்களை மூத்த குழந்தைகள் எல்லாரும் நினைவில் வைத்திருப்பார்கள். 4 முறை திருச்சுழி திரௌபதியம்மன் கோயில் திருவிழா சீடு, ஆய்வுகளின் முக்கிய பங்காற்றியவர். அவர் வாழ்நாள் லட்சியம்கூட ஆன்மீகம் சார்ந்ததாகவே இருந்தது. அன்னை திரௌபதி அம்மனுக்கு வெள்ளி கவசம் செய்து சாத்தியதையே தன் வாழ்நாள் நிறைவு கொண்டாட்டமாக கருதியவர். தான்பெற்ற பிள்ளைகள் 7ஐயும் இக்கால சூழலில் வளர்த்தெடுத்ததையே பெருமையாக கொண்டிருந்தார். 5 பேத்திகளும், 4



பேரன்களும் கண்ட ஐயாவின் மூத்த மகனும் சீடு முதன்மை ஆதரவாளர். கட்டிட காண்ட்ராக்டர் பணி செய்யும் மூத்த மகன் A.S.வீமன் ஆவார். கடைசி மகன் A.S.பழனிமுருகன் மலேசியாவில் பணி செய்கிறார். அவரின் 4 மகன்களும் சமயம், தலைமை பண்பு, நீதி நிர்வாக மேம்பாட்டில் அப்படியே தந்தையை பின்பற்றுபவர்கள். தந்தை சீதனமாக கடின உழைப்பு மனநிலையை கருதும் மனங் கொண்டவர்கள்.

எளிமை, தொழில் நேர்மை, அன்பு, கற்பித்தலில் ஆர்வம், சமூக நல்லிணக்கம், சமூக உணர்வு மற்றும் பெருத்த தகவல் களஞ்சியமாக விளங்கிய திருமிகு. அர்ச்சுனன் அவர்களின் இறுதி அஞ்சலி மற்றும் இறுதியாத்திரை யாவும் அவரின் நெடிய உழைப்புக்கு அங்கீகாரம் தருவது போல் அமைந்திருந்தது. ஏழையாக பிறந்து ஏழையாக மறைந்த போதும் மிகச்சிறந்த மனிதனாகவும், உழைப்பாளியாகவும் பெயர்பெற்ற ஐயா போன்ற உழைப்பாளிகளின் வாழ்வு ஏற்றம் பெறுக! நம் இந்தியாவில் கல்வி, ஆன்மீகம், பொருளாதார மருத்துவ வளமைகள் பெருகட்டும்! ஐயாவின் புகழ் ஓங்கட்டும்.

– C.அருண்குமார்

# செல் போன்களினால் சீரழிவு



மாணவர்கள் கல்லூரிக்கு செல்லும்போது புத்தகங்கள் கொண்டு செல்கிறார்களோ இல்லையோ செல்போன் இல்லாமல் செல்வதில்லை.

செல் போன்களில் மூழ்கி கிடக்கும் மாணவர்கள் செல்போன் மீது மயக்கம் கொண்டு பைத்தியமாகின்றனர். இவர்கள் படிப்பின் மீது இருக்கும் ஆர்வத்தை குறைத்து கொண்டு செல்லின் மீது தங்களது ஆர்வத்தை செலுத்தி வீட்டின் நிலைமை புரியாமல் பெற்றோர்களை கஷ்டபடுத்தி கடன் வாங்கியாவது செல்போன் வாங்கி தர வேண்டும் என வற்புறுத்துகின்றனர்.

இந்த செல்போன்களின் போதை அனைவரையும் தன்பக்கம் அதிவேகமாக ஈர்த்து வருகின்றது. வாழ்வில் தன்னுடைய குறிக்கோளை அடையமுடியாமல் இருக்க செல்போன்களும் ஓர் காரணமாகும்.

எப்படி என்றால் வாழ்வில் முக்கியமான கட்டமான கல்லூரி பருவத்தில் மாணவர்கள் செல்போனில் வீழ்கின்றனர். சிலர் நடக்கும் போதே செல்போனை இயக்கி கொண்டு, வருபவர்களை பார்க்காமல் போய் மோதுவதும் உண்டு.

செல்போனில் பாட்டு கேட்டு கொண்டே செல்லும்போது அடிப்பட்டு இறந்து போனவர்கள் பலர் உண்டு.

செல்போனில் கேமரா வந்ததில் இருந்து மாணவர்களை தீயவழியில் எளிமையாக அவை தள்ளுகின்றன.

ஆபாச படங்கள் மீது மாணவர் ஈடுபாடு செலுத்துகின்றனர். அதனால் அவர்கள் குறிக்கோள் மாறுகின்றன.

எனவே செல்போன்களை பேசுவதற்கு மட்டும் பயன்படுத்துங்கள்.

"செல்போனை வைத்திருங்கள்
செல்போன் உங்களை வைத்திருக்கும்படி
செய்து விடாதீர்கள்"

S. முருகபாண்டி B.A.,



## பாடம் படிக்க வாறோம், நாங்க பகிர்ந்து கொள்ள போறோம்

கூட்டமாக சேர்ந்து வந்து பாட போறோமே
நாங்க பாட போறோமே
கும்மி பாட்டு பாடி பாடி நாங்க அசத்த போறோமே
நாங்க அசத்த போறோமே
தினம் தான் வாறோம் நாங்க திருந்தி எழுத போறோம்
பாடம் படிக்க வாறோம் நாங்க பகிர்ந்து கொள்ள போறோம்
கூட்டமாக சேர்ந்து வந்து.....(1)
குயில் போல கூவிகிட்டு பறந்து வாறோமே
நாங்க பறந்து போறோமே
8 மணிக்கு பறந்து நாங்க ஓடுவோமே
நாங்க ஓடுவோமே
நாங்க பார்க்க ஓடுவோமே
கூட்டமாக சேர்ந்து வந்து.....(1)
ஆட்டம் ஆடி பாட்டு பாடி கொண்டாடுவோம்
நாங்க கொண்டாடுவோம்



## வாண்டுகள் அரங்க பொங்கல்

பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்
வாண்டுகளோட பொங்கல் வாண்டுகளரங்க பொங்கல்
வயல உழுது விதை போட்டு உழைக்கிறவங்க நாங்க
உழைக்கிறவங்க நாங்க
நாளுக்கு நாள் தண்ணீர் ஊத்தி வளக்குறவங்க நாங்க
நிலைத்த வளக்குறவங்க நாங்க
பொங்கல்நாள் எதிர்பார்த்து காத்திருக்கிறோம் நாங்க
காத்திருக்கிறோம் நாங்க
சூரியக் கடவுளுக்கு படைத்திட்டு கொண்டாடுவோம் நாங்க
கொண்டாடுவோம் நாங்க
வருடத்திலே ஒரு நாளாம் அந்த நாள் பொங்கலாம்
அந்த நாள் பொங்கலாம்
பொங்கல் தான் பொங்கல் வந்து பொங்குதாம்
இங்குதான்......

## தவளை ஒன்னு....



தவளை ஒன்னு மழையில்தான் நனைஞ்சு
ஆஹா நனைஞ்சு
நல்லா நனைஞ்சு...
அது இங்கும் அங்குமாக அலைஞ்சு
ஆஹா அலைஞ்சு
ஜோக்கா அலைஞ்சு...
இரையைத் தேடி திரும்பும்போது நனைஞ்சு
ஆஹா நனைஞ்சு
நல்லா நனைஞ்சு
அது சீமையத்திற்கு வந்து குளிர் காயுது
ஆஹா காயுது
நல்லா காயுது

## சிசூ, சிசூனு அன்பா பத்தி விடுவோம்

புத்தம்புது ரோஜா பூத்திருக்கு
புதுவாசம் இங்கே மலர்ந்திருக்கு (2)
வாண்டுகளாம் சின்ன சிட்டுகளாம்
இங்கே அமர்ந்திருக்கு - (2)
அதன் தேனை உறிஞ்ச காத்திருக்கு
சிசூ சிசூனு அன்பா பத்தி விடுவோம்
நம்ம ரோஜாவை பாத்துகிடுவோம்
புத்தம் புது ரோஜா பூத்திருக்கு
புதுவாசம் இங்கே
மலர்ந்திருக்கு





## பரிசுதானே வாங்குறோம்

தென்னமர தோப்புக்குள்ளே
தேங்கா ஒண்ணு கெடக்குது
தேங்காவ ஒடைச்சுப்பார்த்தா
ஒரு டம்ளர் தண்ணியாம்
தண்ணியத்தான் குடிச்சு பார்த்தா
சீனி போல இனிக்குது
தோட்டக்காரன் பார்த்துப்புட்டா
மஞ்சு விரட்டு நமக்குத்தான்
குதிரபோல வேகம் கொண்டு
குதிச்சுகிட்டு ஓடுறோம்
பந்தயத்தில் கலந்துகிட்டு
பரிசுதானே வாங்குறோம்.




## நாட்டார் பாடல்

டப்பா டப்பா வீரப்பா
எப்படா கல்யாணம்
மாசி பிறக்கெட்டும்
மல்லியப்பூ பூக்கட்டும்
எம்.ஜி.ஆர். சண்ட
பார்வதி கொண்ட
உனக்கு எனக்குஞ் சண்ட
ஒடைய போகுது மண்ட
குளத்திலே கொக்கு
அத விரட்டாதடா மக்கு



## சுகமான காற்றாய் சுழலும் ஊற்றாய்

தந்தன தானேன தானேன தந்தன தானனே
தந்தன தானேன தானேன தந்தன தானனே
ஆகாயம் மேலே பாதாளம் கீழே
ஆனந்த உலகம் நடுவினிலே ஆஹா (2)
ஆஹா ஆடி பாடலாம் ஆனந்தமாய் விளையாடலாம் (2)
எல்லோரும் வாருங்கள் விளையாட்டை பாருங்கள்
இந்த நாளை எல்லோரும் கொண்டாடுங்கள்
ஆகாயம் மேலே பாதாளம் கீழே
ஆனந்த உலகம் நடுவினிலே
காவிரி நீராய் வைகையின் ஆறாய்
இருப்போமே என்றும் கொடுப்போமே இன்னும்
சுகமான காற்றாய் சுழலும் ஊற்றாய்
உருவெடுப்போம் என்றும் உருவாக்குவோம் இன்னும்
ஆகாயம் மேலே பாதாளம் கீழே
ஆனந்த உலகம் நடுவினிலே (2)

**வாண்டுகள் அரங்கம் தொண்டர்கள்**

கே. அன்பரசன்
ஓ. மோகன்
டி. பாலமுருகன்
பி. முனியசாமி

**வாண்டுகள் அரங்கம் குழந்தை படைப்பாளிகள்**

கீதா
நந்தினி
முத்துலெட்சுமி
காயத்திரி
ஸ்ரீநாத்
மீனா
ஸ்வாதி
சிவா
பிரதீப்
அமிர்த்
மதுரை வீரன்

## கவிதை

தோட்டத்தில் இருப்பது கரும்பு
நீ செய்வது தான் குறும்பு
காட்டில் இருப்பது பருத்தி
செடியில் இருப்பது செம்பருத்தி
ஏ பாட்டி
நான் டிவியில்
கொடுக்கப் போறேன் பேட்டி

- M.நவீன் நடராஜன். VI

ஒருமுறை சந்தித்தேன்
பலமுறை சந்திக்க வைத்தாய்
இப்போது பலமுறை சிந்திக்கின்றேன்.
ஒரு முறையாவது சந்திக்க முடியுமா

- ஜெய சரஸ்வதி. VI

காந்தி உழைத்தார் நாட்டுக்காக
நாடே உழைக்கிறது
காந்தி நோட்டுக்காக

- புவனேஸ்வரி VI

## கடி ஜோக்ஸ்

- ஈ அதிகமாக உள்ள ரோடு — ஈரோடு
- குடிக்க முடியாத ரசம் — பாதரசம்
- சாப்பிட முடியாத கடை — சாக்கடை
- ஏறிய முடியாத கல் — திண்டுக்கல்
- கார் ஓட்ட தெரியாத டிரைவர் — ஸ்குரு டிரைவர்
- தலையில் வைக்க முடியாத பூ — செருப்பு
- சாப்பிட முடியாத மீன் — விண்மீன்
- உட்கார முடியாத தரை — புளியோதரை
- திருமணம் பண்ண முடியாத பெண் — மதிப்பெண்

R.குமரேசன்
VIII

## விடுகதை

- ஒரு பெட்டிக்குள் இரண்டு தைலம் அது என்ன?
- ஒற்றைக் காலில் ஓயும் வரை ஆடுவான் அவன் யார்?
- மணத்தை தருவான் மஞ்சளாக இருப்பான் அவன் யார்?
- தூங்க வைப்பவன் தூக்கியும் வீசுவான் அவன் யார்?
- பச்சை நிறத்துடையவன் வாய் மட்டும் சிவப்பு அவன் யார்?

- R.குமரேசன்
VIII

- பார்த்தால் அழகு இல்லை
  மொறச்சா அழகு இல்லை
  படிச்சா தான் அழகு

- பார்த்து சிரித்தால் சிரிப்பு
  சேர்த்து பார்த்தால் சேமிப்பு

A.முத்துபாண்டி. VIII

- உள்ளம் என்பது மனம்
  மனம் என்பது குணம்
  குணம் இல்லாதவன் பிணம்

R.சிவக்குமார். VII

- இந்த உலகத்துல அதிகமான
  டிகிரி வாங்குன ஆளு யாருன்னு
  தெரியுமா?
  சூரியன் தான் வேற யாரு?
  எப்படி?
  நேத்து மட்டும் 108 டிகிரி

சூரியகுமார். VI

[illegible]
: ஔவை

## முல்லாவின் கருணை

மன்னர் அரசவையில் இருந்தார். முல்லா அவரைக் காணச் சென்றார். தம்மை தேடி வந்த காரணத்தை முல்லாவிடம் மன்னர் கேட்டார். ஓர் ஏழை பணமில்லாமல் துன்பப்படுகிறான். தாங்கள் பொருளுதவி செய்து அவன் வறுமையைப் போக்க வேண்டும் என்றார் முல்லா. இந்த காலத்தில் அடுத்தவர் துன்பத்தைத் தம் துயரென எண்ணுபவர் மிகச் சிலரே. அடுத்தவர் துன்பத்தைச் சகிக்காமல் கருணை உள்ளத்தோடு பொருளுதவி கேட்டு நீங்கள் வந்திருப்பது பெருமைக்குரியது. என்று மன்னர் பாராட்டினார். பொற்காசுகள் நிறைந்த பையினை அவரிடம் கொடுக்க சொன்னார். முல்லாவும் பையினை வாங்கிக் கொண்டார். அந்த துன்பத்திலிருக்கும் ஏழை யார்? என்று கேட்டபோது அந்த ஏழை தாம் என்றார். மற்றொரு முறை முல்லா நஸ்ருதீன் மன்னரிடம், பரம ஏழை ஒருவன் தான். பட்ட கடனை கட்ட வழியில்லாமல் திண்டாடுகிறான். கருணை வள்ளலாகிய தாங்கள் ஐம்பது பொற்காசுகள் கொடுத்தால் அவன் கடன் தீரும். உங்களையும் வாழ்த்துவான். உங்களைத் தவிர வேறு எவராலும் அவன்பட்ட கடனைத் தீர்க்க முடியாது என்று கூறினார். நீங்கள் தாமே அந்த கடன்காரர்? என்றார் அரசர். சத்தியமாக நானில்லை என்றார். முல்லா. அரசர் கொடுத்த ஐம்பது பொற்காசுகளை பெற்றுக்கொண்ட பின்னர், அந்த ஏழைக்கடன்காரனுக்காக நான் கேட்டு வாங்கவில்லையானால் என்னிடம் அவன் பட்டிருக்கின்ற கடன் எப்படித் தீரும்? என்று கடன்காரனுக்காக கருணை உள்ளத்துடன் கேட்டதாக அரசனிடம் கூறினார்.

- A.சந்தியா. VI

## நான் ஒரு விஜய டி.ஆருங்கோ



★ திருடனுக்கு தேவை கத்தி
போலீசுக்கு தேவை லத்தி

★ நாட்டோட பேரு சீனா
மாணவனுக்குத் தேவை பேனா

★ ரோட்ல போகுது காரு
மரத்துக்கு தேவை வேரு

★ வீட்ல இருக்குது பாத்திரம்
கணக்குப்போட தேவை சூத்திரம்

★ புத்துல இருக்கு பாம்பு
நான் யூஸ் பண்றது சாம்பு

★ மழையில்லாமல் காடு இல்லை
சீடு இல்லாமல் நானில்லை.

- முத்துகணேஷ், VI

## சர்மியின் கவிதை

கண்ணுக்கு மையழகு
கவிதைக்குப் பொய்யழகு
வாழ்வுக்கு மெய்யழகு

கில்ஸ் கிங் ஊட்டி
ரிவர் கிங் கங்கை
பீச் கிங் கோவா
ரூடபு கிங் அட...நீங்கதாங்க

- பா. அழகுஜோதி V

❑ மூன்று சங்க காலங்களுக்கும் அரங்கமாக விளங்கிய புகழ் மதுரைக்கு உள்ளது.

## மருத்துவரின் விளையாட்டும் தாத்தாவின் மரணமும்

ஒரு ஊரில் ஒரு தாத்தா வசித்து வந்தார். அவர் அறுவடை செய்ய இரண்டு அரிவாள்களும், மூன்று கலப்பைகளும் ஒரு மண் வெட்டியும் வைத்திருந்தார். ஒருநாள் ஒரு அரிவாளை வெயிலில் விட்டு மறந்து சென்று விட்டார். தாத்தா பிறகு அரிவாளை காணோம் என்று தேடிய பொழுது வீட்டிற்கு வெளியே வெயிலில் கிடந்தது. அதை எடுத்த பொழுது அவர் கை சுட்டது. உடனே அவர் அரிவாளுக்கு காய்ச்சல் என்று நினைத்து மருத்துவரிடம் கொண்டு சென்றார். அதற்கு மருத்துவர் கேலியாக சிரித்து விட்டு உங்கள் வீட்டில் கிணறு உள்ளதா என்று கேட்டார். அதற்கு அந்த வயதானவர் கிணறும் இருக்கிறது. அதன் நிறைய நீரும் இருக்கிறது என்றார். விளையாட்டுத்தனமாக அப்படியானால் உடனே சென்று கிணற்றில் அரிவாளை முழுவதுமாக கிணற்றில் மூன்று முக்கு முக்கவும் என்றார். அவரும் வீட்டுக்கு சென்று முக்கினார். சூடு குறைந்துவிட்டது. அவர் காய்ச்சல் நின்றது என்று நினைத்தார். ஒரு வாரம் கழித்து தாத்தாவுக்கு காய்ச்சல் வந்தது. மருத்துவரிடம் செல்ல நினைத்தபோது அவர் கூறியது நினைவுக்கு வந்தது. உடனே கிணற்றில் மூழ்கினார். மூன்றாவது முறையில் இறந்து விட்டார். மருத்துவரின் விளையாட்டும், தாத்தாவின் முட்டாள் தனமும் ஒரு உயிரை பறித்தது.



– S.நாகூர் ராஜா



## கவிதையின் கதை

கவிதைக்கு சொந்தமானவன்
கவிஞன் மட்டும் அல்லன்
காதலில் தோற்றால்தான்
கவிதை தோன்றுமா?
இல்லை, கற்பனையில் மூழ்கினால் போதும்
ஒவ்வொருவரின் கற்பனை ஒரு மாதிரி
அதை புரிந்து கொள்ளும் கோணம் பல மாதிரி
ஒருவர் தான் காணும் சொப்பனமே
அவருடைய கவிதையின் அர்ப்பணமாகிறது.

ந. இராம்குமார்

## எனக்குப் பிடித்த கவிதை



தொடக்கப் பள்ளி முதல்
உயர் பட்டப் படிப்பு வரை
இலவச உணவு,
இலவசப் படிப்பு
இலவச பாடநூல்கள்,
இலவச பஸ்பாஸ்
மேல்படிப்புக்கு உதவி
ஆராய்ச்சி படிப்புக்கு
அரசின் நிதி உதவி
எல்லாம் வேண்டும்
எல்லாம் கிடைக்கும்
வேலை மட்டும்
வெளிநாட்டில் வேண்டும்
இளைஞனே, நீ இப்படி
சென்றுவிட்டால்
உன் வீடு வேண்டுமானால்
உருப்படலாம்
நாடு?

தொகுப்பு : R. பாஸ்கர் ராஜா

## உழைப்பின் ஊதியம்



தேவி என்பவள் வீட்டிற்கு செல்லம். படிப்பில் படுசுட்டி. அவளுக்கு அனைத்து தேர்வுகளிலுமே அதிக மதிப்பெண் பெற வேண்டும், முதலிடத்தில் வரவேண்டும் என்ற ஆசை இருந்தது. அதன்படி அனைத்து தேர்வுகளிலும் முதலிடம் பெற்றாள். ஆனால் அரையாண்டுத் தேர்வில் வகுப்பில் அவளுக்கு அடுத்த இடம் பெற்று வரும் சித்ரா முதல் மதிப்பெண் பெற்றாள். ஆசிரியை தேவியை அனைத்து மாணவர்கள் முன்பும் திட்டித் தீர்த்தார். இதை வைத்து சித்ரா தேவியை கேலி செய்தாள். தேவி அவமானம் தாங்க முடியாமல் அழுதாள். அவள் தனது முழு மூச்சை படிப்பில் செலுத்தி, மிகுந்த சிரத்தையுடன் படித்தாள். அதன் பயனாக முழு ஆண்டுத் தேர்வில் பள்ளியிலேயே முதலிடம் பெற்றாள். ஆசிரியை தேவியைப் பாராட்டி பரிசுகள் வழங்கினார். தேவியின் கடின உழைப்பின் பலனை அறிந்த சித்ரா வெட்கி தலை குனிந்தாள்.

- M.ஜோதி. IX Std.



★ How are you?
என்று கேட்க மறந்து விட்டாலும்
Who are you?
என்று கேட்டு விடாதே

★ பழகும் முன் தனிமை
பழகிய பின் இனிமை
பிரிவு என்பது கொடுமை
பிரிய வேண்டிய நிலைமை

## எனக்கு பிடித்த பாடல்

★ வேற்றுமையில் ஒற்றுமை தான் பாரதம் - தம்பி
வேதங்கள் பிறந்த இடம் பாரதம்
ஆற்று வளம் சோற்று வளம்கொஞ்சமா - இல்லை
ஆன்மீக தத்துவம்தான் பஞ்சமா
இனங்கள் பல மொழிகள் பல ஆயினும்
இந்து ஏசு புத்தர் முகமதியர் ஆயினும்
இந்தியர் எனும் உணர்விலே வளர்ந்து வரும் நாடிது.

முத்து கிருஷ்ணன்
IX Std



## Our Dear Supporter

*Little kids! Little kids!*
*Beauty faces! Beauty faces!*
*You can see God,*
*In the faces of the children!*
*Yes, We've seen that in*
*Your helping heart*
*One considers God*
*as who educates the people*
*yes/ you've proved that*
*by helping to build*
*our library*
*One would be a good teacher*
*When he grows up the children well*
*like you swill children with helping hearted*
*who is our friend,*
*your teacher/ Laura*

R. Karthick, B.A.

## மனித குலம் எங்கே?

மாறிவரும் நாகரிகம்
வெளிநாடுகளின் மேல் மோகம்
எப்போது தீரும் இந்த தாகம்
இத்தாகம் நமக்கு சாபம்
வந்தது உலகமயமாதல் என்னும் பாவம்
நாடுகளுக்கிடையில் இல்லை எந்தவித பாகம்
இது ஒரு ஆதாரம் -நாம்
இன்னும் அடிமைதான் பட்டிருக்கிறோம்
என்பதற்கோர் உதாரணம்.

- R.கோர்த்திராஜா. B.A.

## பிழைத்த கவிதை

மழையே நீயோ ஒரு நொடியில்
அழுக்கை துடைக்க வந்த
அல்ட்ரா மார்டன் பியூட்டிசனோ!

- A.அமுதா. B.A.

## ஆயுள் தண்டனை

- கருவிலே நான்
  கலக்கத்திலோ தாய்
  வழக்கத்தில் இல்லையாம் பெண்குழந்தை
  கள்ளிப்பாலைத் தாண்டினேன்
  கர்ப்பச்சிறையையும் தாண்டினேன்
  தாய் போராடி - நீங்கியது
  மரணத் தண்டனை
  ஆனால் பெற்றேன்
  உரிமைகளற்ற வாழ்வு என்னும்
  ஆயுள் தண்டனை

## வறுமை

- இலையை எங்கே போட
  எதிரெதிராய் எதிர்பார்ப்புடன்
  நாயும், மனிதனும்

- கிளி ஜோசியன் - எதிர்காலம்
  சொல்கிறான் பசி மயக்கத்தோடு

## தவம்

- தவமாய் தவமிருந்து பெற்றெடுத்த
  தாயிடம், மகன் சொன்னான்
  தோழி தான், என் வாழ்வில் கிடைத்த
  தவமென்று.

## அறிவியல் பெயர்கள்

- Dove - Pigeon
  Rabbit - Oryctolagus cuniculus
  Frog - Rana hexadactyla
  Naja Naja - Indian cobra
  Human - Homo sapines
  Shark - Scollodon sorrakowah.

P. Saranyadevi, B.Sc.,


## "பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்"

1. "பயப்படாதே" என்ற சொல் பைபிளில் 365இடத்திலுள்ளது.
2. பைபிள் என்ற வார்த்தை "பிப்லியா" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது.

M.அமுதா B.A.,

# தடயங்கள் இன்றி

புகழ்மாலை திரட்டுவோம்
பூலோகத்தையே ஆளுவோம்
தாய்நாட்டிற்கு செல்வங்களாய் நாங்கள் பிறந்தோம்
செல்வ நாடாக்க விதையாக விழுந்தோம்
சாதனைக்கு நாங்கள் சங்கிலி
யோசனைக்கு மங்கா சூரிய ஒளி
மலையாய் எழுந்து நிற்போம்
சமயம் பாராமல் வெற்றிக் கனியை பறிப்போம்
இளைஞரும், எமனையும் எதிரே நின்றால்
சமாதானம் உரைக்க யாரும் உண்டோ?
தடயங்கள் இன்றி காலடி கிடையாது
இளந்தலைமுறை இன்றி இவ்வுலகம் அசையாது



- பி.பெரியசாமி. B.E.

## மார்ச் - 8 உலக மகளிர் தினம்
### (இந்தியாவின்)



1. முதல் பெண் ராணுவ கமாண்டெண்ட்
   - புனிதா அரோரா
2. முதல் பெண் பேருந்து ஓட்டுநர்
   - வசந்தகுமாரி (தமிழ்நாடு)
3. இந்திய விமானப்படை விமானத்தை தனியாக ஓட்டிய முதல் பெண்
   - அரிதா கவுர்
4. முதல் பெண் ரயில் எஞ்சின் ஓட்டுநர்
   - சுரேகா யாதவ்
5. முதல் பெண் உச்சநீதிமன்ற நீதிபதி
   - பாத்திமா பீவி
6. முதல் பெண் ஜனாதிபதி
   - பிரதீபா பாட்டீல்
7. முதல் பெண் ஐ.ஏ.எஸ். (1960)
   - அன்னா ஜார்ஜ் மல்ஹோத்ரா
8. முதல் பெண் பிரதமர்
   - இந்திராகாந்தி
9. முதல்பெண் டி.ஜி.பி.
   - கஞ்சன் சௌத்ரிபட்டாச்சார்யா
10. எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பெண்
    - பச்சேந்தரி பால்

A.அமுதா B.A.,

# ஜென் கதை

ஒரு ஊரில் ஒரு செல்வந்தன் வாழ்ந்து வந்தான். அவன் மிக கர்வம் கொண்டவன். அதனால் அவன் நிம்மதியுடன் வாழவில்லை. அவன் தன் செல்வங்களை எல்லாம் மூட்டையாகக் கட்டிக் கொண்டு ஒரு ஜென் துறவியிடம் சென்றான். அவரிடம் தன் நிம்மதியின்மையைத் தெரிவித்தான். அவன் பேச்சின் மூலம் அவன் கர்வம் கொண்டவன். செல்வத்தை நம்புபவன். மேலும் மகிழ்ச்சியற்றவன் ஆகியவற்றை அறிந்து கொண்டார் துறவி . பேசிக் கொண்டிருக்கும் போதே துறவி அவனுடைய பணப்பையை பிடுங்கிக் கொண்டு ஓட ஆரம்பித்தார். அச்செயலால் அதிர்ச்சியடைந்த செல்வந்தன் அதை கைப்பற்ற அவரை பின் தொடர்ந்து ஓட ஆரம்பித்தான். இறுதியில் துறவி தன் இருப்பிடத்திற்கே வந்து அமர்ந்தார். அவனிடம் அவனுடைய செல்வத்தைத் தந்தார். அப்போது அவன் மிகவும் நிம்மதி அடைந்தான். அப்போது துறவி இந்த செல்வம் தானே முதலில் உன்னிடம் இருந்தது. அப்போது இந்த மகிழ்ச்சி உன்னிடம் இல்லையே! என்றார். அப்போது அந்த செல்வந்தன் தன் நிலை உணர்ந்தான். மகிழ்ச்சி வேறெங்கும் இல்லை. தன்னிடமே உள்ளது என்று உணர்ந்தான். இந்தக் கதை உணர்த்தும் நீதி.



R.கௌசல்யா



# காதலிக்கிறேன்

தியாகராஜர் கல்லூரியில் ஆங்கில துறையில் சேர்ந்தேன். மிகவும் பயமாகத்தான் இருந்தது. ஏனென்றால் யாரையும் எனக்குத் தெரியாது. வரவேற்பு நிகழ்ச்சியில் அஞ்சினேன். என்ன செய்வார்கள் என்று தெரியாமல் பயந்தேன். பின்பு எல்லோரிடமும் நன்றாக நகைச்சுவை உணர்வுடன் பழகினேன். நண்பர்களும் தோழிகளும் நிறைய கிடைத்தார்கள். நானும், நண்பர்களும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் நிகழ்ந்தவைகளைக் கூறி சிரிப்போம். எனக்குத் தெரிந்த ஒரு சில திறமைகளை வெளிக்காட்டினேன். பலகுரலில் நண்பர்களிடம் பேசினேன்.

இதையே ஒவ்வொரு ஆசிரியர்களும் வந்து என்னை வகுப்பில் செய்ய சொன்னார்கள். நான் அதுபோன்று செய்தேன். அனைவரும் அதைப் பாராட்டினார். நான் கல்லூரியில் பெற்ற முதல் பாராட்டு அது தான். பின்பு ஒருசில போட்டிகளுக்கு பிற கல்லூரிகளுக்கு சென்றேன். பரிசுகளும் பெற்றேன். நாட்டு நலப் பணித்திட்ட முகாம் நடந்தது. சிலைமானில் உள்ள இடத்தில் 10 நாட்கள் தங்கியிருந்தோம். என் வகுப்பு தோழர்களை மட்டுமே எனக்குத் தெரிந்த நிலை இந்நிகழ்வால் மாறியது. நண்பர்களுடன் ஒன்றாக இணைந்து 10 நாட்கள் உண்டு, உறங்கி, பம்பு செட்டில் குளித்து தேங்காய் தின்று மகிழ்ந்தேன். அனைத்து துறை மாணவர்களுடன் பழக வாய்ப்புக் கிடைத்தது. தற்போது எனக்கு எல்லாத் துறைகளிலும் நண்பர்கள் இருக்கிறார்கள். அந்த கல்லூரியில் சென்று நான் நிறைய நண்பர்களையும் அண்ணன் அக்கா போன்றவர்களையும் சேகரித்துள்ளேன். பொங்கல் விழாவை கல்லூரியிலே கொண்டாடினோம். நண்பர்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருந்தோம். நண்பர்களின் பிறந்த நாள்களைக் கொண்டாடினோம். அதில் என்னுடைய பிறந்த நாளை கேக் வெட்டிக் கொண்டாடினார்கள் என் நண்பர்கள், தோழிகள். கேக் வெட்டி கொண்டாடி முகத்தில் பூசிக் கொண்டு கொண்டாடிய நாள் எனக்கு மிகவும் புதுவிதமாக இருந்தது. நான் என் தியாகராஜர் கல்லூரியை காதலிக்கிறேன். இனிவரும் ஆண்டுகளும் என் கல்லூரி தரும் இனிய அனுபவங்களுக்காக காத்திருக்கின்றேன்.

காதலுடன்
பி.முனியசாமி B.A.

## அம்மாவின் கடைசிக் கடிதம்

என் வயிற்றின்
பூர்வீகக் குடிமகனே!
நினைவிருக்கிறதா என்னை?
அகதியாய் அலையும்
அம்மா எழுதுகிறேன்.

அடிவயிற்றுத் தழும்புகளில்
விரலை ஓட்டுகிறேன்
பனிக்குடம் உடைத்த
பச்சிளம் தளிராய்
உன்னையே ஸ்பரிசித்த
கர்ப்ப சுகம்



வெற்றுப் பானையின்
கடைசி அரிசியையும்
கண்ணீரில் வேகவைத்து ஊட்டினேன்.
வாய்க்கரிசி போட வருவாயா?

கைப்போர்வைக் கதகதப்பில்
கண் வளர்ந்தவனே!
பால் கணக்கு
இன்னமும் பாக்கியிருக்கிறது.
பால் கடன் கழிக்கப்
பாலூற்ற வருவாயா?

புறாக்கூண்டு
இருக்க இடமில்லை என்றாய்!
இடமில்லாதது
மனசில்தானே?

இரு
கருப்பு வண்டுகளின்
உயிர்க் கிடங்கு.
எல்லார் பார்வையும்
வாசலின் மீதே
உறவுக்காகவா?
உயிர் அறுப்பவனுக்காகவா?
யார் வருகை முதலில்?

மணியார்டரில் வரும்
அவசரக் கையெழுத்தைவிட
உன்
கைவிரல் ஸ்பரிசம் வேண்டும்.
கடைசி மூழி வேண்டும்.
உன் முகதரிசனம் வேண்டும்.

ஆறடிக்குப் போகும் முன்
ஓரடி வயிறு துடிக்கிறது.
வாயேன்
ஒரே ஒரு முறை.

உயிர் மூச்சை
உனக்காகப் பிடித்திருக்கும்
உன் அம்மா....

V.பெத்துராஜா

## முயல்

முயல் தூங்கும்
முயல் - ஆமைக் கதையில்
சென்றுவளரவள்
ஆமை ஜெயிக்கலாம்.
முயலாமல் தூங்கும் -ஏல்
முயலாமையில் ஏதுமில்
ஜெயிக்க முடியாது.
முயல், முயல்
எழுந்து சென்றுகொண்டேயிரு
முயல்.



V.பெத்துராஜா



## பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் தமிழக மற்றும் புதுவை கூட்டமைப்பு

### 2வது மாநில மாநாடு - சென்னை

மதுரையிலிருந்து 13 பேர் அடங்கிய குழு சீடு நிறுவனத்தின் படைப்பு மனைசார்ந்த நிதி அறங்காவலர் K.அன்டரசன் தலைமையில் புறப்பட்டது. இம்மாநாடு அனைத்து தளங்களில் குழந்தைகளின் பங்கேற்பு என்ற நோக்கில் சென்னை புரசைவாக்கம் லெட்சுமி சுந்தரம் கல்யாண மண்டபத்தில் நடந்தது.

28-12-07 அன்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம்தென்னரசு மாநாட்டை இனிதே துவக்கி வைத்தார். குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விளக்கவுரையோடு நடந்த முதலாம் நாள் மாலை கலைநிகழ்ச்சியில் நம் சீடு குழந்தைகள் மணிகண்டன், ஐயப்பன், கார்த்திஸ்வரன் மற்றும் பாண்டியராஜனின் தேவராட்டம் அரங்கேறியது. இது அரங்கம் அதிர மதுரை சீடு-ஐ தனித்து அடையாளப்படுத்தியது. அன்று இரவு அந்த கூட்டமைப்பின் தேர்தல் நடைபெற்றது. நம் சீடு குழந்தை P.பாண்டியராஜன் மண்டலப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாம் நாள் (29-12-07) அன்று குழுவாக அமர்ந்து குழந்தைகள் தங்களின் ஆற்றல்களை வளர்க்கும் செயல்களான கதை, கட்டுரை, தலைமைப் பண்பு போன்ற திறன்களை வளர்த்துக் கொள்ளும் பயிற்சியில் ஈடுபட்டனர்.

மூன்றாம் நாள் (30-12-07) அன்று சென்னை காவல்துறை கூடுதல் ஆணையர் தலைமையில் பரிசளிப்பு விழாவும், பதவியேற்பு விழாவும் நிகழ்ந்தது. பின்னர் குழந்தைகள் பங்கேற்பு உரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மன்றோ சிலையிலிருந்து மாபெரும் பேரணியை நடத்தினர். இதில் பல்வேறு மாவட்டக் குழந்தைகள் பங்கேற்றனர். நம் சீடு குழந்தைகளும் பங்கேற்ற இந்நிகழ்வு மெரினா கடற்கரையில் முடிந்தது.

பின்னர் மெரினா கடற்கரையில் நேரம் செலவிட்டு விட்டு சீடு குழந்தைகள் ஊர் திரும்பினர்.

இம்மாநாடு புது அனுபவம் மட்டுமல்லாது பலவித திறன்களை வளர்த்துக் கொள்ள ஒரு பயிற்சிக் கூடமாகவும் அமைந்தது.

R.கார்த்திக் B.A.,
தேடல்கள் அரங்கம்

## விளாடி வினா


1. பற்களை பாதிக்கும் நோய் எது?
2. இலைகளுக்கு நிறம் தருவது எது?
3. புதினாவின் தமிழ்ப்பெயர் என்ன?
4. உலகிலேயே மிகச்சிறிய நாடு?
5. உலகிலேயே மிக நீளமான நதி எது?
6. நாயின் அறிவியல் பெயர் எது?
7. இந்தியாவின் தேசிய விளையாட்டு எது?
8. சென்னை மாநிலம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்ட நாள் எது?
9. இந்தியாவின் துணை குடியரசு தலைவர் யார்?
10. தமிழ்நாடு பள்ளி கல்வித் துறை அமைச்சர் யார்?
11. டெஸ்ட் போட்டிகளில் ஒரே இன்னிங்ஸில் அதிக ரன் அடித்த வீரர் யார்?
12. கொரியா நாட்டு நாணயத்தின் பெயர் என்ன?
13. இலங்கை தேசிய விலங்கு எது?
14. ஆஸ்திரேலியா தலைநகரம் எது?
15. ஒலிம்பிக் இந்திய ஹாக்கி அணி எத்தனை முறை தங்கம் வென்றுள்ளது?

—சரவணக்குமார். XI

விடை :

1. கேரிஸ்
2. பச்சையம்
3. ஈ எச்ச கீரை
4. வாடிகன் சிட்டி
5. நைல் நதி
6. கானிஸ் ஃபெமிலியாரிஸ்
7. ஹாக்கி
8. ஜனவரி14, 1969
9. ஹமீத் அன்சாரி
10. தங்கம் தென்னரசு
11. லாரா. 400
12. வொன்
13. சிங்கம்
14. மெல்போர்ன்
15. 8 முறை

## பாட்டில் விழுங்கும் சுவையான முட்டை!



**தேவையான பொருட்கள் :** முட்டையின் விட்டத்தை விட குறுகிய வாயுள்ள ஒரு பாட்டில், காகிதம், தீப்பெட்டி, வேக வைத்த முட்டை, சிறிது எண்ணெய் மற்றும் தண்ணீர்.

இந்த மேஜிக்கல் முட்டையை பாட்டில் தானாகவே விழுங்கும். நண்பர்களுக்குத் தெரியாத இந்த அறிவியல் சார்ந்த மேஜிக்கை செய்து காண்பியுங்கள்.


**செய்முறை :** பாட்டிலை மேஜை மீது வைத்து வேக வைத்த முட்டையை பாட்டிலின் குறுகிய வாய் பகுதியில் வைத்து உள்ளே தள்ளிக் காண்பியுங்கள். ஆனால், அது உள்ளே போகாது. இப்போது சில காகிதங்களைக் கிழித்து கையில் வைத்துக் கொண்டு மந்திரம் சொல்வது போல் சொல்லி அதனை தீக்குச்சியால் கொளுத்தி பாட்டிலின் உள்ளே போட்டு எரிய விடவும்.

இப்போது தண்ணீரில் நனைந்திருக்கும் வேக வைத்த முட்டையை அந்த பாட்டிலின் குறுகிய வாய்ப் பகுதியில் வைக்கவும். இப்போது என்ன நடக்கிறது? என்று பாருங்கள். நாம் கையால் பாட்டிலுக்குள் தள்ள முடியாத முட்டை தானாகவே பாட்டிலுக்குள் செல்லும். இது பார்ப்பதற்கு பாட்டில் முட்டையை விழுங்குவது போல் ஆச்சரியமாக இருக்கும்.

இந்த மேஜிக் செய்யும் முன் பாட்டிலின் வாய் பகுதியில் சற்று எண்ணெய் தடவி விடவும். அது மட்டுமில்லாது முட்டையைத் தண்ணீரில் நனைத்து வைக்கவும். ஏனெனில், வறட்சியாக இருந்தால் முட்டை உடைந்து விடும். செய்து பார்த்து மகிழுங்கள்!

நன்றி: சிறுவர் மணி

## • சூட்டு உடம்புக்கு என்ன செய்யலாம்?




பிஞ்சுக் கடுக்காய், ரோஜா மொக்கு, சூரத்தாவரை, காய்ந்த திராட்சை ஆகியவற்றை முதல் நாள் இரவு தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலை வெறும் வயிற்றில் அருந்த உடல் சூடு தணியும். இரு மாதத்திற்கு ஒருமுறை இவ்வாறு செய்யலாம்.

## • டீசல் வாசனைப் பிரியரா நீங்கள்..




டீசல் புகையை அதிகம் சுவாசித்தால் மூளையின் வழக்கமான செயல்பாட்டை அது குறைத்துவிடும். டீசல் புகையில் உள்ள மிகச்சிறிய துகள்கள் மூளையில் தங்கி சுவாச நோய்களை ஏற்படுத்தும் என்றும், மூளையில் ஒரு வித அழுத்தம் உண்டாகி அதன் தகவல் செயல்பாட்டில் மாற்றம் ஏற்படுவதையும் கண்டுபிடித்துள்ளனர். டீசல் புகை விரும்பிகள் தங்கள் மூக்கை மூடிக்கொள்வது நல்லது.

## • வெயிலில் விளையாடலாமா?



சூரிய ஒளியில் உள்ள வைட்டமின் 'டி' நமது உடலில் எலும்புகளை பலப்படுத்துகிறது. எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துகிறது. மேலும் சர்க்கரை நோய் வருவதை தடுக்கிறது என்றும் கண்டறிந்துள்ளார்கள். எனவே சுட்டெரிக்கும் மதிய வெயிலில் விளையாடுவதை தடை செய்துவிட்டு காலை, மாலை நேர வெயிலில் மகிழ்ச்சியாக விளையாடலாமே!

# பேரின்ப வாழ்வு தரும் மதுரை மீனாட்சி!



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]





# 2007 - 2008

## சீடு அறக்கட்டளை குழந்தைகள் பயிலும் பள்ளிகள்

- **ஆரம்ப பள்ளிகள்**
  - பட்டுக்குடி ஆரம்ப பள்ளி
  - நல்லிச்சேரி மாதரசி ஆரம்ப பள்ளி
- **நடுநிலைப் பள்ளிகள்**
  - கருப்பூர் மாதரசி நடுநிலை பள்ளி
  - நல்லம் நடுநிலைப் பள்ளி
- **உயர்நிலைப்பள்ளிகள்**
  - நல்லிச்சேரி சோதுகுரா உறவின்முறை உயர்நிலைப்பள்ளி
  - வைபியாஸ் சரோஜினியா உயர்நிலைப் பள்ளி
- **மேல்நிலைப்பள்ளிகள்**
  - இராஜகிரி மேல்நிலைப்பள்ளி
  - அமெரிக்கன் கல்லூரி மேல்நிலைப்பள்ளி
  - மீனாட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி
  - தியாகராஜா நடுமுறை மேல்நிலைப் பள்ளி
  - V.C மேல்நிலைப்பள்ளி
  - O.C.P.M. மேல்நிலைப்பள்ளி
  - பாண்டித்துரை மேல்நிலைப் பள்ளி
- **சீடு அறக்கட்டளை இளைஞர்கள் பயிலும் கல்லூரிகள்**
  - அமெரிக்கன் கல்லூரி
  - தியாகராஜா கல்லூரி
  - பாண்டியன் சரஸ்வதி பொறியியல் கல்லூரி
  - மீனாட்சி கல்லூரி
  - M.A.V.M.M. பொறியியல் கல்லூரி
  - மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
  - தொலைநிலை கல்வி இயக்கம்

## சீடு அறக்கட்டளையில் நிகழ்த்தப்பட்ட திரையிடல்கள்

- பெரியார்
- பாரதி
- காமராசர்
- காந்தி
- கப்பலோட்டிய தமிழன்
- மிருகம்
- சிரிப்போம் சிந்திப்போம்
- ஆன்ட்
- லிட்டில் ஸ்டூவர்ட்
- ஏர்பட்
- கிரேட் டிக்டேட்டர்
- ஹாரி பாட்டர் - 5 பாகங்கள்
- அனுமன்
- பரமார்த்த குரு கதைகள்
- டாம் அண்ட் ஜெர்ரி

## பயிற்சி முகாம்கள்

- தேவராட்டம் பயிற்சி
- கோலாட்டம் பயிற்சி
- சிலம்பாட்டம் பயிற்சி
- தப்பாட்டம் பயிற்சி
- களிமண் பொம்மைகள் செய்யும் பயிற்சி
- தொப்பிகள் செய்யும் பயிற்சி
- பாடல் பயிற்சி
- பாட்டு எழுதும் பயிற்சி
- ஓவிய பயிற்சி
- காகிதங்களில் கலைப் பொருட்கள் செய்யும் பயிற்சி
- பேச்சுக்கலை பயிற்சி
- வாழ்த்து அட்டைகள் செய்யும் பயிற்சி
- சமையல் கலை பயிற்சி
- காய்கறிகளில் கலைப் பொருட்கள் செய்யும் பயிற்சி
- வசந்த முகாம் 2007–10 நாள் முகாம்

## சீடு அறக்கட்டளையின் சிற்றுலாக்களும் சுற்றுலாக்களும்

- அலைவாப்பட்டி
- சோழவந்தான்
- நாகமலை
- சம்பக்குடி
- சத்திரப்பட்டி - 8 சுற்றுகள்
- சென்னை
- அதிசயம் - 3 சுற்றுகள்
- காந்தி மியூசியம்
- கடவூர் - 3 சுற்றுகள்
- இராஜாஜி பார்க் - 6 சுற்றுகள்
- ECO பார்க் - 5 சுற்றுகள்
- திருவனந்தபுரம்
- நாகப்பட்டினம் அக்கரை பேட்டை
- கும்பகோணம்
- தொப்புளான் புலியூர்
- திருவாரூர்
- கழுகுமலை
- திருநெல்வேலி
- குட்லாடம்பட்டி
- திருச்சுழி
- பாண்டிச்சேரி
- ஆரோவில்

# 2007 - 2008

## சீடு -இல் நிகழ்ந்த சிறப்பான நிகழ்வுகள் :-

+ புதுயுகம் இதழ் வெளியீட்டு விழா
+ உணவுத் திருவிழா
+ புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் மற்றும் போட்டிகள்
+ குழந்தைகள் தினவிழா
+ மார்கழி உற்சவம்

(1999-ல் இருந்து 2008ம் ஆண்டு வரை சீடு குழந்தைகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் எட்டாமாண்டு நிறைவு விழா)

+ அமெரிக்கன் கல்லூரி மாணவர் சதீஸ்-ன் கலை இரவு
+ சீடு அறக்கட்டளை பெயர்ப்பலகை திறப்பு விழா
+ ஆசிரியர் தின விழா
+ கல்வி நாள் கொண்டாட்டம்
+ பழங்குடியினர் பண்பாட்டு விழா
+ விளையாட்டு நாள் போட்டிகள்
+ சீடு படைப்புகள் அரங்கேற்றம்
+ பொங்கல் விழா
+ சீடு நிறுவன நாள் விழா
+ வான்முகில் கலைவிழா
+ இளைஞர் தினவிழா

## விருந்து நிகழ்ச்சிகள் ;

- குழந்தைகள் கூடுகையும், விருந்து நிகழ்வும் **5 முறை**
- இளைஞர் கூடுகையும், விருந்து நிகழ்வும் **2 முறை**
- மன்சூர் அண்ணன் திருமண விழா விருந்து

## போட்டிகள் :-

- கிரிக்கெட் போட்டிகள் - 3 முறை
- உறியடிக்கும் போட்டி
- சமையல் போட்டி
- உடையலங்காரப் போட்டி
- படைப்பரங்கப் போட்டிகள்
- Mrs. ஹீனா நந்தானி ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள்

## விவாத அரங்குகள் :-

- தினசரி இதழ்கள்
- தீவிரவாதம்
- கலாச்சார சீரழிவுகள்

## கருத்தரங்குகள் :

- உலகமயமாக்கல்
- குழந்தை உரிமைகள்
- உணவும் ஆரோக்கியமும்
- பொதுத் தேர்வை எதிர்கொள்ளத் தேவையான அறிவுரைகள்
- புத்தக அறிமுகங்கள், மதிப்புரைகள்
- வாசிப்பும், வளமையும்
- பெண்கள் தினம்

## பண்பாட்டு விழாக்கள்

- தீபாவளி
- இரம்ஜான்
- கிறிஸ்துமஸ்
- பொங்கல்
- புத்தாண்டு

## சீடு குழந்தைகளும் இளைஞர்களும் உற்சாகமாகப் பங்கேற்ற இல்ல விழாக்கள்

- தொண்டர் பெத்து அண்ணன் வீட்டுத் திருமணம்
- இக்பால் வீட்டுத் திருமணம்
- தொண்டர் காளீஸ்வரி திருமணம்
- தொண்டர் ரதா திருமணம்
- தொண்டர் கௌதமன் அண்ணா திருமணம்
- தொண்டர் மன்சூர் அண்ணா திருமணம்
- நமச்சிவாயம் காதணிவிழா



## சீடு அறக்கட்டளை

தினசரி 240 குழந்தைகள் பயன்பெறும் வகையில் மூன்று குழந்தைகளுக்கான அரங்கங்களை 22 கல்வி வழிகாட்டல் பயிற்றுநா் தொண்டர்களின் நல்உதவியோடு அமைத்துள்ளது.

பள்ளிக்கல்விக்காக 1 முதல் 4ஆம் வகுப்பு வரையிலும் குழந்தைகள் வாண்டுகள் அரங்கத்திலும் 5ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் வேர்கள் அரங்கத்திலும் 9ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் கனவுகள் அரங்கத்திலும் தங்கள் கல்வி செயல்பாடுகளுக்காக ஒன்றிணைந்து இயங்குகிறார்கள்.

தினசரி மாலை 5-30 மணி முதல் 9-15 மணி வரையிலும் வார விடுமுறை, திடீர் விடுமுறை, அரசு விடுமுறை தினங்களிலும் காலை 10-00 முதல் 12-00 மணி வரையிலும் மதியம் 2-00 மணி முதல் 4-00 மணி வரையிலும் அரங்கங்கள் குழந்தைகள் பயன்பாட்டுக்கு உள்ளன.

சீடு முழுமைத்துவ கல்வி அரங்கங்களில்

சீடு குழந்தைகள் பேரவை

செந்தமிழ் நூலகம்

தேன்கூடு வங்கிகள்

புதுயுகம் இதழ்

வான்முகில் கலைக்குழுக்கள் போன்றவை தனித்தனி பெரும்குழுக்களாக இயங்குகின்றன.

கல்லூரி கல்விக்கு உதவியாக தேடல்கள் அரங்கம் தனியாக இயங்குகின்றது.

வே.மாரியம்மாள், அ.ச.கார்த்திக் பாரதி,
கே.அன்பரசன், மெல்வி அன்னாமலை

## சீடு குழந்தைகள் பேரவை (MSCF)

சீடு பயன் பெறும் குழந்தைகளையும், சீடு பணி செய்யும் பகுதிகளிலுள்ள குழந்தைகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியாக சீடு குழந்தைகள் பேரவை மதுரையை மையமாகக் கொண்டு இயங்குகின்றது. சுமார் 250 குழந்தைகள் இதில் ரூ. 3/- மாத சந்தா செலுத்தி ஓர் இயக்கமாக இயங்கி வருகிறார்கள்.

ஜனநாயக பண்புகளை வளர்த்துக் கொள்ளல்.

ஆளுமை, மற்றும் தலைமை பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்

அனைத்து தளங்களில் தங்கள் பங்கேற்பினை அளித்தல்

தங்கள் பிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வு காணுதல் போன்ற அடிப்படை நோக்கங்களைக் கொண்டு சீடு குழந்தைகள் பேரவை குழந்தைப் பருவம் எங்கள் உரிமை என்ற கொள்கை முழக்கமோடு இயங்கி வருகின்றது. கூடி உழைத்து பெறுவோம் வளமை.

இதன் 9வது பேரவை தலைவர்களாக சுரேஷ்ராஜன் மற்றும் கற்பகஜோதி பொறுப்பேற்று சிறப்பித்தனர். ஜனவரி 2008 தேர்தலில் 10வது பேரவை தலைவர்களாக நாகலெட்சுமியும் மகுடபதியும் தேர்வு செய்யப்பட்டனர்.

பிரதிநிதிகளாக

V. திவ்யபாரதி - P. மணிகண்டன் - கனவுகள் அரங்கம்

V.ஜென்சிராணி -S.முத்துகணேஷ் - வேர்கள் அரங்கம்

C. ஸ்வாதி - C.நமச்சிவாயம் - வாண்டுகள் அரங்கம்

போன்றோரும்

செயலராக பிரபு அவர்களும்

பொருளாளராக P. சரவணக்குமாரும் தேர்வு செய்யப்பட்டனர்.

சீடு இன் முக்கிய நிகழ்வுகளை MSCF பொறுப்பேற்று நடத்துகிறது. MSCF தமிழ்க் குழந்தை இயக்கங்களின் கூட்டமைப்பில் ஓர் உறுப்பினராக இருக்கிறது இதன் மண்டல பிரதிநிதியாக P.பாண்டியராஜன் தேர்வு பெற்றுள்ளார்.

எம்.மகுடபதி

## செந்தமிழ் நூலகம்

செந்தமிழ் நூலகம் தனியான கட்டிட வசதியில் 1000 புத்தகங்களுடன் குழந்தைகளே குழந்தைகளுக்காக இயக்கும் வளமைக் கல்வி மற்றும் குழந்தை உரிமைகளுக்காக ஆய்வு மற்றும் ஆவண நூலக மையமாக நடத்தி வருகிறார்கள்.

கடந்த 2007ஆம் ஆண்டின் துவக்கத்தில் கரும்பாலை பகுதியின் செந்தமிழ் நூலகம் அமைத்திட, திட்டம் த்திட்டப்பட்ட ஓர் ஆண்டு காலத்தில் நூலகம் 80% பணிகள் முடிவடைந்து 2008ஆம் ஆண்டில்மே மாதம் முழு பயன்பாட்டுக்கு வர உள்ளது. இந்நூலகம் வாசிப்பை வளமாக்கவும், உயர் கல்வி வேண்டுவோர்க்கு தேவையான வழிகாட்டல்களையும் பயிற்சிகளை தந்து உதவிடும் நோக்கங்களையும் கொண்டுள்ளது. குழந்தைகள் ஆவண படங்கள், ஒலி, ஒளி பேழைகள் இங்கு சேகரிக்கப்பட்டு உள்ளன.

புதிய புத்தகங்கள் அறிமுகம், எழுத்தாளர் சந்திப்புகள் சொற்பொழிவுகள் கேட்டல், பேச்சு, எழுத்து பயிற்சிகள், கவிதை, கதை பட்டறைகள், விவாத அரங்குகள், பட்டி மன்றங்கள் போன்றவைக்குரிய களமாகவும், செந்தமிழ் நூலகம் விளங்குகின்றது. குழந்தைகள் மதுரை புத்தக கண்காட்சியில் புத்தகங்கள் வாங்கி மகிழ்ந்தனர். நூலக கட்டிடம் சுவிஸ் நண்பர்களால் டுலௌரா மற்றும் சுவிஸ் குழந்தைகளின் வழிகாட்டலோடு எழுப்பப்பட்டது. மெல்லியும், மெல்வி நண்பர்களும் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை வழங்கியுள்ளனர்.

M. தங்கலெட்சுமி

## புதுயுகம் சிற்றிதழ்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம் என்ற முழக்கத்தோடு சீடு புதுயுகம் ஆறு இதழ்களாக வெளிவந்துள்ளன. குழந்தைகளே. குழந்தை களுக்காக நடத்தும் இச்சிற்றிதழ் இனிவரும் காலங்களில் பல இதழ்களை காணும் என உறுதியளிக்கின்றோம். 500 பிரதிகளை வெளியிடும் புதுயுகம், ஒரு தனிச்சுற்று இதழாகும். குழந்தைகளின் கற்பனை திறனுக்கும் படைப்பாற்றலுக்கும் களமான சீடு புதுயுகம் கரும்பாலை பகுதியில் மட்டும் 250 வாசகர்களை கொண்டு உள்ளது. மீதி 250 இதழ்கள் சீடு ஆதரவாளர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

சி.கற்பகஜோதி, சி.அருண்குமார்

## தேன்கூடு

தேன்கூடு என்ற குழந்தைகள் வங்கியானது குழந்தைகளின் சேமிப்பு எண்ணங்களை பெருக்கும் முயற்சிக்காக நடத்தப்படுவதாகும். குழந்தைகளே குழந்தைகளுக்காக இயக்கும் இவ்வமைப்பு சுயதேவைகளை பூர்த்தி செய்வதற்கான விருப்பப்படுவோர் குழுவாகும்.

ஜூன் 2007 முதல் மார்ச் 2008 வரையிலான 10 மாதங்களில் வாண்டுகள் அரங்கம் ரூ. 1446 ரூபாயும் வேர்கள் அரங்கம் 4073 ரூபாயும் கனவுகள் அரங்கம் 1204 ரூபாயும் சேர்த்து மொத்தமாக சீடு குழந்தைகள் விருப்ப சேமிப்பாக 6870 ரூபாய்கள் சேர்த்து உள்ளனர். மேலும் சீடு குழந்தைகள் தேன்கூடு சந்தா, பேரவை சந்தா, புதுயுகம் சந்தா என்று தனிதனியே விருப்ப உறுப்பினர் கட்டணமாக ரூ. 7 செலுத்துகிறார்கள். ஜூன் 2008இல் இப்பணத்துடன் நாலில் ஒரு பங்கு வரும் பணத்தினை சேர்த் அடுத்த கல்வி ஆண்டு செலவினங்களுக்கு வழங்கிட சீடு தேன்கூடு வங்கி திட்டமிட்டுள்ளது.

வங்கி உறுப்பினர்களாக தற்சமயம்150 குழந்தைகள் உள்ளனர்.

எஸ்.சுல்தான். என்.நாகலெட்சுமி

## சீடு இளைஞர் பேரவை (MSYF)

2007ஆம் ஆண்டில் மட்டும் 25 உறுப்பினர்களை கொண்டிருக்கும் சீடு இளைஞர் பேரவை முழுநேர பணிக்கு செல்லும் இளைஞர்களையும் பகுதி நேர

கல்லூரி செல்லும் இளைஞர்களையும், முழு நேர கல்லூரி செல்லும் இளைஞர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

தேடல்கள் அரங்கத்தில் கல்லூரி செல்லும் இளைஞர்கள் 15பேர் உறுப்பினர்களாக உள்ளனர். வருமாண்டில் உறுப்பினர் எண்ணிக்கை 30ஐ தொடும் என்பது மகிழ்ச்சிகரமான செய்தி. இளைஞர் வங்கியில் 16 பேர் ஜூன் 2007 முதல் மார்ச் 2008 வரை மாதந்தோறும் ரூ. 100 வீதம் சேமித்து 14, 800 சேர்த்துள்ளனர் என்பது மகிழ்வுக்குரிய செய்தியாகும்.

சீடு இளைஞர் கலைக்குழுவின் இளைஞர்கள், குழந்தைகள் கலைக்குழுவுடன் இணைந்து பல கலை நிகழ்வுகளை வழாங்கி வருகின்றனர்.

சீடு இளைஞர் பேரவை - SRS Trust உடன் இணைந்து இலவச மருத்துவ முகாம்களில் சேவை செய்தது. முதியோர் மற்றும் பிற அமைப்புகளுடன் சீடு இளைஞர் பேரவை பணி செய்து 2 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

சீடு குழந்தைகள், இளைஞர்களின் பிறந்த தினங்கள், குடும்ப விழாக்கள் போன்றவற்றுக்கு சீடு இளைஞர்கள் பேரவையினர் பொறுப்பேற்று நடத்தி சிறப்புசெய்கின்றனர்.

சீடு இளைஞர் பேரவையின் ஒரு பகுதியாக ஆசிரியர் தொண்டர் குழு இயங்குகிறது. மொத்தம் 16 பேர் கொண்ட குழு இயங்குகிறது. மொத்தம் 16 பேர் கொண்ட குழு தங்களுக்குள் பொருளாதார மேம்பாட்டுக்காக குலுக்கு சீட்டு போன்றவை நடத்திக் கொள்கின்றனர்.

சீடு குழந்தைகள் பேரவை, சுதந்திரதின விழாவையும், குடியரசுத் தின விழாவையும் நடத்தியது. இளைஞர் பேரவை ரம்ஜான், தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ் பண்டிகைகளை நடத்தியது. சீடு ஆசிரியத் தொண்டர் குழு, புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்தியது.

சீடு பணியாளர் குழு, குழந்தைகள் தினவிழா, இளைஞர்கள் தினவிழா வான்முகில் கலைவிழா மற்றும் ஆசிரியர் தின விழாக்களை நடத்தியது. 2007ஆம் ஆண்டில் மட்டும், மதுரை -சீடு தான் பணி செய்யும் பகுதிகளில் விக்கி பாராட்டு பேரணி, 60ஆம் ஆண்டு சுதந்திர தின பேரணி கிறிஸ்துமஸ் நகர்வலம், மார்கழி உற்சவ கலை பேரணி, பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் பேரவை, காந்தி ஜெயந்தி, அமைதி சைக்கிள் பேரணி, கரும்பாலை முதல் சத்திரப்பட்டி வரை மலை, மழை வள பாதுகாப்பு சைக்கிள் பேரணி, கரும்பாலையிலிருந்து சத்திரப்பட்டி வரை சைக்கிள் பயிற்சி போன்றவற்றை பிரமாண்டமாக நடத்திபுள்ளது.

V. பெத்துராஜா, O. மோகன்

## வான்முகில் கலைக்குழு

ஓவிய பயிற்சி முகாம், களிமண்ணில் கைவண்ணம், காகிதங்களில் கலை வண்ணங்கள் வாழ்த்து அட்டைகளை தயாரித்தல், தொப்பிகள் செய்யும் பயிற்சி, காய்கறிகளில் கலை வண்ணம், சமையல் கலை வகுப்புகள், பேச்சுக்கலை முகாம்கள் போன்றவற்றை நடத்திய சீடு வான்முகில் கலைக்குழு மதுரையில் பல்வேறு வகைப்பட பயிற்றுநர்களிடமிருந்து பயிற்சிப் பெற்றுள்ளது.

நாடக பயிற்சி முகாம்
தேவராட்ட பயிற்சி முகாம்
கோலாட்ட பயிற்சி முகாம்
தப்பாட்ட பயிற்சி முகாம்
சிலம்பாட்ட பயிற்சி முகாம்

போன்றவற்றை நடத்தியுள்ள சீடு வான்முகில் Seed அறக்கட்டளையில் உள்ள அனைவரையும் ஆடும் வல்லமை பெற்றவர்களாக்கி உள்ளது

தொண்டர் ஈஸ்வரி கல்யாண கலை நிகழ்ச்சி

தொண்டர் கௌதமன் கல்யாண கலை நிகழ்ச்சி

தொண்டர் மன்சூர் திருமண வரவேற்பு கலைநிகழ்ச்சி

சீடு குழந்தைகளின் எட்டாமாண்டுகூடுகை

மார்கழி உற்சவம்

புத்தாண்டு கலை இரவு

தோழர் சத்ஸ் அவர்கள் மேற்கத்திய நடன கலை இரவு போன்றவை இவ்வாண்டு முழுமையும் வசந்தகாலமாக்க உதவின.

இந்த ஆண்டு காய்கறி கலை வண்ண பயிற்சியும், சீடு இளைஞர்களின் கிறிஸ்துமஸ் குடிலும் சீடு அறக்கட்டளையின் கை வண்ணங்களுக்கு சாட்சியம் கூறி நின்றன.

சுமார் ரூ. 2000 ஈட்டிய கரும்பாலை சீடு உணவுத் திருவிழா, பொதுமக்களை வெகுவாக ரசிக்க வைத்தன. வெகு சிறப்பாக நடைபெற்ற உணவுத் திருவிழாவில் 14 உணவு ஸ்டால்களுடன் சீடு குழந்தைகள் சமையற்கலையில் நள வீம பாகத்தை வென்றார்கள்.

செசி தேசிய நாடக விழாவில் மூன்றுநாள் சீடு சிற்றுண்டி சாலை, 3000 குழந்தைகள், பார்வையாளருக்கு பயனுடையதாக இருந்தது என்பதில் மிகையில்லை.

2007ஆம் ஆண்டில் மாயச்சட்டை நாடகம் 3 முறையும், அறுந்தவால் இருமுறையும் குழந்தைகளால் அரங்கேற்றப்பட்டன.

மதுரை சீடு என்றால் இளங் கலைஞர்களின் கூடாரம் என்பதற்கேற்ப, நாட்டார் கலைகளில் சீடு குழந்தைகளும், இளைஞர்களும் சிறந்தவர்களாக விளங்குகிறார்கள்.

இவ்வாண்டு இறுதியில் (2007-2008) பிப்ரவரி 17 காந்தி மியூசியத்தில் நிகழ்ந்த வான்முகில் கலைவிழா எண்ணற்ற குழந்தைகளின் திறமைகளை அரங்கேற்றுவதற்கான களமாக விளங்கியது.

R.பாஸ்கர்ராஜா, S. முருகபாண்டி

# இன்னும் சில செய்திகள்...

❖ 2007-2008ஆம் கல்வியாண்டில் கரும்பாலை பகுதி குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் கல்வி கற்கும் பணியில் 15 தொண்டர்கள் பணியாற்றி வருகின்றனர். விடுமுறை கால நடவடிக்கைகளுக்கு 3 தொண்டர்களும், நூலக நடவடிக்கை களுக்கு 1 தொண்டரும், கலை, கலாச்சார நடவடிக்கைகளுக்கு 1தொண்டரும், இதழியல் நடவடிக்கைகளுக்கு 1 தொண்டரும், ஆக 18 தொண்டர்கள் பணியாற்றிவருகின்றனர்.

❖ சீடு தற்போது சிறிய அறைகள் ஆயினும் 6 கட்டிடங்களில் வாடகையில் இயங்கி வருகின்றது

❖ நவீன மின் விளக்குகள் மற்றும் மின் விசிறிகள் உதவியுடன் சீடு கல்வி மையங்கள் இயங்குகின்றன.

❖ 3 முழு நேர பணியாளர்களும், 1 பகுதி நேர பணியாளரும் பணி செய்கின்றனர்.

❖ குழந்தைகளுக்காக விளையாட்டு பொருட்கள், சிறிய உடற்பயிற்சி கூடம் ஆகியன உள்ளன.

❖ தமிழ், ஆங்கில அகராதிகள், தமிழ் நாளிதழ்கள் உள்பட சீடு செந்தமிழ் நூலகத்தில் 1000த்திற்கும் மேற்பட்ட தமிழ் ஆங்கில நூல்கள் பொது பயன்பாட்டுக்காக உள்ளன.

❖ சுமார் 150 குழந்தைகள், இளைஞர்கள் தினசரி வருகை தரும் பயனாளிகளாவர்.

❖ 250 பேர் பதிவு பெற்ற அங்கத்தினராக சீடு-இல் உள்ளனர்.

❖ 2 கணினிகள், டி.வி. மற்றும் ஒரு சி.டி. பிளேயர் சீடு பயன்பாட்டில் உள்ளன.

- எம்.மன்சூர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

## SEED MADURAI

*(To Support and Empower the Under Privileged)*

CHILDREN DEVELOPMENTAL PROGRAMME - 2007 - 2008

SEED PROVIDING HELP DETAILS

| Sl No. | Particulars | BOYS | GIRLS | TOTAL |
|---|---|---|---|---|
| 1 | Provided with cycles | 1 | 2 | 3 |
| 2 | +1 Students getting Educational Expenses | 7 | 3 | 10 |
| 3 | +2 Students getting Educational Expenses | 6 | 0 | 6 |
| 4 | 10th Private Students dropped out from school and getting the SEED Coach and Educational Expenses | 4 | 0 | 4 |
| 5 | 12th Private Students dropped out from school and getting the SEED Coach and Educational Expenses | 4 | 0 | 4 |

## SEED MADURAI

*(To Support and Empower the Under Privileged)*

YOUTH DEVELOPMENTAL PROGRAMME - 2007 - 2008

| Particulars | MALE | FEMALE | TOTAL |
|---|---|---|---|
| Provided with Educational Expenses | 3 | 0 | 3 |
| Provided with Correspondent Courses | 4 | 0 | 4 |
| +2 Private Coaching | 2 | 0 | 2 |
| Provide to the Volunteer Honourium | 15 | 3 | 18 |



## மதுரை சீடு இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் 2007-2008ஆம் ஆண்டு மதுரையில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றும், கலந்து கொண்டும் தங்களை பட்டை தீட்டிக் கொண்ட நிகழ்வுகள்.

திருச்சுழி திருவிழா கள ஆய்வு
பாரதே ஜி பிஸ்கட் பேக்டரி பார்வையிடல்
கடச்சனேந்தல் மீன்பண்ணை பார்வையிடல்
ஏலக்குறிச்சி கடலைமிட்டாய் பேக்டரி பார்வையிடல்

- **பொங்கல் சுற்றுலா விழா ( 3 நாட்கள்)**

தமுக்கம் மைதானம்
முதல் நாள் : விஜயலெட்சுமி நவநீத கிருஷ்ணன் பாடல் நிகழ்ச்சி
இரண்டாம் நாள் : பட்டிமன்றம் (ஞான சம்பந்தன்)
மூன்றாம் நாள் : மாநகராட்சி பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள்

- **செசி தேசிய நாடக விழா**

முதல் நாள் : நம்மால் முடியும்
இரண்டாம் நாள் : சிப்பிக்காடு, ஷேக்ஸ்பியர், பீமராவ் ராம்ஜி அம்பேத்கார் தோல்பாவை கூத்து
மூன்றாம் நாள் : கடல் பூதம், வாழும் வரை, குதிரை முட்டை

- **காந்தி ஜெயந்தி நிகழ்ச்சிகள்**

முதல் நாள் : ஜெயகாந்தன் உரை வீச்சு
இரண்டாம் நாள் : கு. ஞானசம்பந்தன் பட்டிமன்றம்
மூன்றாம் நாள் : ரா.மோகன் பட்டிமன்றம்
நான்காம் நாள் : சாலமன் பாப்பையா பட்டிமன்றம்

- தலித் கலை விழா (07-08)
- லேடி டோக் ஆண்டு விழா
- அமெரிக்கன் கல்லூரி ஆண்டுவிழா (07-08)
- அமெரிக்கன் கல்லூரி Am Fest (2 நாட்கள்)
- கவி வாசிப்பரங்கம் (காந்தி மியூசியம்)
- மையம் தந்தனா கலைவிழா (சுப்பிரமணியபுரம்)
- தமிழர் பண்பாட்டு விழா (கோரிப்பாளையம்)
- இந்திய விடுதலைப்படை சாகசங்கள் (விரகனூர்)
- சுப்பாராவ் பிறந்த தினம் (காந்தி மியூசியம்)
- சத்தியா கிரக நூற்றாண்டு விழா
- நா. பாண்டியன், குமரி அனந்தன் சொற்பொழிவுகள்
- நாசர் கலந்துரையாடல் நிகழ்ச்சி (அமெரிக்கன் கல்லூரி)
- விடியல் ஆண்டுவிழா (TVS School)
- விடியல் குழந்தைகள் தினவிழா (காந்தி மியூசியம்)
- வரதட்சிணை ஒழிப்பு - மாநாடு (ஒத்தக்கடை)

# பள்ளிகளில் சீடு குழந்தைகளின் சிறப்பிடங்கள்

- 26-1-2007ஆம் ஆண்டு செண்பகம் - முருகன் அறக்கட்டளையின் X மதிப்பெண்களுக்குரிய பரிசு ரூ.2,000த்தை அருண்குமார் (XII) வென்றார். அவரை ஊக்குவிக்கும் வாழ்த்தும், சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.
- 26-1-2008 ஆம் ஆண்டு செண்பகம் - முருகன் அறக்கட்டளையின் (X) மதிப்பெண்ணுக்குரிய பரிசு ரூ. 3,000த்தை சரவணக்குமார் (XI) வென்றார். அவரைபாராட்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.
- தாங்கள் படிக்கும் பள்ளிகளில் கல்வியில் முன் மாதிரி மாணவர்களாக கற்பக ஜோதி, சரவணக்குமார், பாண்டியராஜன், தங்கலெட்சுமி, நாகலெட்சுமி (XI), மகுடீஸ்வரி (VII), சுல்தான் (XII), ஆனந்த் (V), ஷர்மிளா (V), போன்றோர் விளங்குகின்றனர்.
- நடனத்தில் சிவக்குமார் (VII), சோபியா (V), நிர்மல் (VII), பாண்டிச்செல்வம் (VIII), தீ நடனம் தினேஷ் (VIII), பிரபு (X), ராம்கி (VIII), விக்கி (X) போன்றோர் சிறந்து விளங்குகின்றனர்.
- சீடு வாண்டுகள் அரங்கத்தில் உள்ள 20 நான்காம் வகுப்பு குழந்தைகளும் பள்ளி நடனங்களில் சிறப்பாக பங்கேற்றார்கள் என்பது சிறப்பான செய்தி.
- ஓவியங்களில் மகுடபதி, பாண்டியராஜனும், விளம்பர உருவாக்கத்தில் இராசிக் அகமதும் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.
- தான் படித்த பள்ளியில் தடகள பிரிவில் சிறப்பிடம் பெற்றவர் சுரேஷ்ராஜன் XII
- 2007-2008 ஆம் கல்வியாண்டில் Seed அறக்கட்டளை X மாணவர்கள் 10 பேரும் தேர்ச்சி பெற்றனர். முதல் மதிப்பெண் P. சரவணக்குமார் (தமிழ்வழி) 410, C.கற்பக ஜோதி (ஆங்கில வழி) 405, XII மாணவர்கள் 6 பேரும் தேர்ச்சி பெற்றனர். முதல் மதிப்பெண் P.சரண்யா 956
- கரும்பாலையில் உள்ள, P.சரவணக்குமார், பாரதிதாசன், N.ஜோதி மூவரும் செண்பகம் முருகன் அறக்கட்டளை பரிசினை வென்றமைக்காக பாராட்டு போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

## கல்லூரி அளவில் சீடு இளைஞர்களின் சிறப்பிடங்கள்

- NSS முகாமில் முருகபாண்டி கலை நிகழ்வுகள் வழங்குதலில் சிறப்பிடம் பெற்றார்.
- முனியசாமி டோக் பெருமாட்டி கல்லூரி பல குரல் நிகழ்ச்சியில் சிறப்பிடம் பெற்றார்.
- மாணவி சரண்யா, மீனாட்சி கல்லூரி சூழலியல் கட்டுரைப் போட்டியில் சிறப்பிடம் பெற்றார்.
- மாணவி அமுதா ஓவிய கலைகளில் சிறப்பிடம் பெற்றவர்.
- மாணவர் அழகிரி எளியவர் ஒருவருக்கு இரத்ததானம் செய்தார்.



## மாவட்ட அளவில் சீடு பங்கேற்புகள் :

- சீடு பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பின் மாவட்ட கூட்டத்தை கரும்பாலை சமுதாயக் கூடத்தில் பொறுப்பேற்று நடத்தியது.
- FCMRP இன் 5 மாவட்டக் கூட்டங்களில் சீடு பங்கேற்றது.
- FPCP இன் மாவட்ட அளவிலான Capacity building - RTI

  தகவலியல் - கப்பலூர்

  இயற்கை வளம் - வலையங்குளம்

  சூழலை பயன்படுத்துதல் - விடியல்

  போன்ற கருத்தரங்குகளில் பங்கு கொண்டு சீடு குழந்தைகள் பங்கு கொண்டு சிறப்பு பெற்றனர்.
- FPCP-இன் இரண்டு மண்டலக் கூட்டங்களில் சீடு பங்கேற்றது.
- கரும்பாலையில் நடைபெற்ற FCMRPன் கூட்டத்தில்

  "உணவும் ஆரோக்கியமும்" என்ற தலைப்பில் சீடு தொண்டர் ஆர்.கார்த்திக் கருத்துரை வழங்கினார்.
- குழந்தைகள் கடத்தப்படுதலுக்கு எதிரான CACT அமைப்பின் குடைப் பேரணியில் சீடு குழந்தைகள் இளைஞர்கள் பங்கேற்றனர்.
- பதினொன்றாம் வகுப்பு C.கற்பகஜோதி மாவட்ட கல்வி அலுவலகம் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றார்.
- குண்டு எறிதல், 100mt ஓட்டம், 200mt தொடர் ஓட்டம், போட்டிகளில் சுரேஷ் ராஜன் (பன்னிரெண்டாம் வகுப்பு) பரிசுகளை வென்றார். மாவட்ட அளவில் குண்டு எறிதலில் சுரேஷ் ராஜன் இரண்டாம் இடம் பெற்றார்.
- மாவட்ட சதுரங்க போட்டியில் மாணிக்கராஜா VII சிறப்பிடம் பெற்றார்.
- மாவட்ட ஹாக்கி குழுவில் பாலாஜி VII சிறப்பிடம் பெற்றுள்ளார்.

- FPCP - Forum for promotion of child participation
- FCMRP - Federation for child movement of Rights to participation



### மாநில அளவிலான சீடு பங்கேற்புகள், பெற்ற சிறப்புகள் :

- Forum for promotion of child participation அமைப்பில் மாநில உறுப்பினராக மதுரை சீடு இடம் பெற்றுள்ளது.
- Federation for child movement of Right to participation அமைப்பில் மாநில உறுப்பினராக சீடு இடம் பெற்றுள்ளது.
- FCMRP மாநில மாநாட்டில் K.அல்போன்சன் தலைமையில் 13 பேர் கலந்துக் கொண்டு பங்கு கொண்டும், கலை நிகழ்வுகளை வழங்கியும் சிறப்பு பெற்றனர்.
- FCMRP மாநில நிர்வாகிகள் பட்டியலின் கீழ் மண்டல பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்டு பாண்டியராஜன் சிறப்பிடம் பெற்றார்.
- +2 அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் இந்திய பண்பாடு பாடத்தில் சிறப்பிடம் பெற்ற விக்கிக்கு மாலை மரியாதைகள் செய்யப்பட்டு அவருக்கு பாராட்டு விழாவும் நடத்தப்பட்டது.
- FCMRPயின் மாநில இதழியல் பயிலரங்கில் பாண்டியராஜன் பங்கு கொண்டார்.
- சென்னை தேசிய நீர்வள கருத்தரங்கில் சீடு சார்பாக திருமிகு. முத்துக்குமார் பங்கு கொண்டார்.
- மாணவி சரவணப்பிரியா மாநில வாலிபால் குழுவிலும், மாநில கடற்கரை வாலிபால் குழுவிலும் இடம் பெற்றுள்ளார்.
- சீடு தொண்டர் அருண் அவர்கள் மாநில வாள் வீச்சுப் போட்டியில் சிறப்பிடம் பெற்றமைக்காக ஓராண்டு சீடு இல் பணி செய்தமைக்கான பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## தேசிய அளவில் சீடு அறக்கட்டளை பங்கேற்புகளும், அது சார்ந்த நிகழ்வுகளும்

- ஆஷா கல்வியாளர்களின் தேசிய அளவிலான மாநாடு திருவாரூர் விஷ்ணுபுரத்தில் நடைபெற்றது. நமது நிறுவனத்தின் சார்பாக நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி அண்ணன் தலைமையில் அன்பரசன், மன்சூர், R.கார்த்திக் போன்றோர் பங்கு கொண்டு பங்கேற்பு பதக்கங்களுடன் திரும்பி வந்தனர்.
- செசி நிறுவனமும், காந்தி மியூசியமும் இணைந்து நடத்திய தேசிய நாடக விழாவில் மூன்று நாட்களும் திரளாக கலந்து கொண்டதோடு மட்டுமின்றி, சீடு இளைஞர்கள் சார்பில் சிற்றுண்டி சாலை அமைத்து பொருளீட்டும் நிகழ்வும் நடத்தப்பட்டது.
- டெல்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனுடையோர் தேசிய விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதலில் பதக்கம் பெற்றிட்ட மாற்றுத் திறனுடைய சீடு தொண்டர் அருண் அவர்களுக்கு தொண்டர் சான்றிதழும், வாண்டுகளின் பாராட்டு மாலைகளும் வழங்கப்பட்டன.





## சீடுக்கு அங்கீகாரங்களும், பாராட்டுக்களும் :

- சேவைக்காக SRS TRUST - இன் பரிசு
- கும்பகோணம் விஷ்ணுபுரம் பள்ளி (ஆஷா) பரிசுகள் - 4
- சென்னை FPCP பரிசு
- இந்து நாளிதழின் புதுயுகம் குறித்து Young World பகுதியில் பிரசுரம்
- தமிழ் சுடர் நாளிதழில் செய்திப்படம்
- உள்ளூர் சானல்களின் செய்திகளில் சீடு - இன் நிகழ்ச்சிக்கு இடம்.
- வான்முகில் கலைவிழாவைப் பாராட்டி THE HINDU Young World பகுதியில் செய்தி வெளியிட்டிருந்தது.
- தமிழ் நாளிதழ்கள் ஆன தினகரன், தமிழ் முரசு, தினமலர் ஆகியவை வான்முகில் கலைவிழா குறித்து செய்திகள் வெளியிட்டிருந்தன. மற்றும் உள்ளூர் தொலைக்காட்சி சேனல்கள் வான்முகில் கலைவிழாவை தங்கள் செய்திப்பகுதியில் ஒளிபரப்பின.

## சீடு-க்கு வருகை தந்து பெருமை சேர்த்திட்ட பன்னாட்டு நண்பர்கள், ஆதரவாளர்கள்

| | |
|---|---|
| திருமிகு. மெல்லியஸ் அண்ணாமலை | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. அண்ணாமலை | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. நாகம்மாள் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. ஈவ்லின் மாசிலாமணி | - சுவிட்சர்லாந்து |
| திருமிகு. சௌரா வில்லிஜர் | - சுவிட்சர்லாந்து |
| திருமிகு. ஜான் | - சுவிட்சர்லாந்து |
| திருமிகு. இசபெல் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. ஜிம் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. கிறிஸ்டின் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. அன் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. சக் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. கெல்சி | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. பெபினா நோட்டர் | - சுவிட்சர்லாந்து |
| திருமிகு. ஜக் | - போலந்து |
| திருமிகு. ஈனா | - பெல்ஜியம் |
| திருமிகு. கிறிஸ்டினா கேத்தரின் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. பௌல் | - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. எர்னஸ்ட் | - சுவிட்சர்லாந்து |
| திருமிகு. ஈவா | - சுவிட்சர்லாந்து |
| திருமிகு. சபினா | - சுவிட்சர்லாந்து |
| திருமிகு. பிரிஜிட் ரோனால்ட் | - சுவிட்சர்லாந்து |

## சீடு-க்கு பல்வேறு சமயங்களில் வாழுநர்களாக, பயிற்றுநர்களாக, கருத்தாளர்களாக, சொற்பொழிவாளராக, நண்பர்களாக, பார்வையாளர்களாக வருகை தந்து சீடு-இன் வளர்ச்சிக்கு உதவியவர்கள்

| | |
|---|---|
| திருமிகு. பாரி கணேசன் | இன்சினியர் - யு.எஸ்.ஏ. |
| திருமிகு. குமாரசாமி | விரிவுரையாளர் - தியாகராசர் கல்லூரி |
| திருமிகு. அந்தோணிசாமி | - செய்தி ஆசிரியர் - தமிழ்ச்சுடர் |
| திருமிகு. ராதாகிருஷ்ணன் | - தேக்வாண்டோ பயிற்றுநர் |
| திருமிகு. கணேஷ்குமார் | - அரசு ஆற்றுப்படுத்துநர் - கோவில்பட்டி |
| திருமிகு. சுரேஷ்குமார் | - பொறிஞர் - சென்னை |
| திருமிகு. கௌதமன் | - அறிவியல் ஆய்வாளர் - சண்டிகர் |
| திருமிகு. செந்தில் குமார் | - பொறிஞர் - சென்னை |
| திருமிகு. செந்தில்குமார் | - அறிவியல் ஆய்வாளர் |
| திருமிகு. ஞானசேகரன் | - Project Leader, CRRD |
| திருமிகு. சந்திரமோகன் | - Project Manager Pro Media Global Ltd., |
| திரு. பாண்டியன் | - தொழிலதிபர் - மானகிரி, மதுரை |
| திரு. பிரபாகர் | - தொழிலதிபர் - மானகிரி, மதுரை. |
| திருமிகு. அருண்மொழி மதுரம் | - தலைமையாசிரியர் கரும்பாலை ஆரம்பப்பள்ளி |
| திருமிகு. கருப்பையா | - கவுன்சிலர், 11வது வார்டு கரும்பாலை. |
| திருமிகு. ஜெகநாதன் | - சிலம்பாட்ட கலைஞர் திருவாரூர் |
| திருமிகு. சதீஸ் | - கரக கலைஞர் - தொட்டியான் பட்டியூர் |
| திருமிகு. சதீஸ் | - நடன கலைஞர், தேவகோட்டை |
| திருமிகு. பிஜு அண்ணா | - செரி மையம், கடலூர் |
| திருமிகு. ஜிம் அண்ணா | - விடியல் மையம், மதுரை |
| திருமிகு. கந்தசாமி | - பிரிட், கப்பலூர் |
| திருமிகு. ஜெகநேசன் | - பிரிட் மையம், கப்பலூர் |
| திருமிகு. ஆரோக்கியம் | - விடியல் மையம், மதுரை |

திருமிகு. காயத்ரி முத்துக்குமார் - விரிவுரையாளர் யாதவா பெண்கள் கல்லூரி, மதுரை.
திருமிகு. மணிவேல் - மெக்கானிக் இன்ஜினியர், மதுரை
திருமிகு. பிரவீன் - சமூக ஆய்வாளர், மதுரை
MSS கல்லூரி மாணவ, மாணவியர் - சமூகப்பணிக் கல்லூரி, மதுரை
முதலாமாண்டு ஆங்கிலத்துறை மாணவ, மாணவியர் - தியாகராஜர் கல்லூரி, மதுரை.
திருமிகு. மாரியம்மாள் - ஆசிரியர் - மதுரை
திருமிகு செல்வி - ஆசிரியர் - மதுரை
திருமிகு. சாந்தி - ஆசிரியர் - மதுரை
திருமிகு. ஆனந்த் - தமிழ் மாணவர், பாண்டிச்சேரி
திருமிகு. தங்கபாண்டி - நடன கலைஞர், மதுரை
திருமிகு. குமார் - தப்பாட்ட கலைஞர், மதுரை
திருமிகு. மோகன் - தொழிலதிபர், மதுரை
திருமிகு. ஹீனா - தொழிலதிபர், மதுரை
திருமிகு. பாரத் மற்றும் தண்டபாணி - Honeywell Private Solutions, மதுரை
திருமிகு. சித்ரா - மகாத்மா பள்ளி ஆசிரியை
திருமிகு. எக்கோன் - நாகலாந்து
திருமிகு. விஜய் MSW - அமெரிக்கன் கல்லூரி
திருமிகு. பாஸ்கர் - சென்னை ஆஷா

### சீடு அ.சு. கார்த்திக் பாரதியின் 17ஆண்டு சமூக மற்றும் கல்வி பணிக்கு துணை நின்றவர்களும் ஊக்குவித்த சான்றோர்களும்

- திருமிகு. அர்ச்சுனன் பிள்ளை
- திருமிகு. சண்முகத்தம்மாள்
- புத்தகங்கள்
- கரும்பாலையை சுற்றியுள்ள நூலகங்கள்
- திருமதி. Dr.தாஜ் இராஜப்பா
- திருமிகு. டாக்டர். இராஜப்பா
- திருமிகு. டாக்டர். சாமுவேல் சதானந்தா
- திருமிகு. பேரா. பிரபாகர்
- திருமிகு. பிரோனி மற்றும் அருண்
- திருமிகு. ஸ்ரீராம் மற்றும் ஜெயபிரகாஷ்
- திருமிகு. பேரா. ராஜு (NSS)
- திருமிகு. Dr. G.C. ஆபிரகாம்
- திருமிகு. ஆண்டர்சன் மற்றும் அவரது குடும்பத்தார்
- திருமிகு. மெர்லி அண்ணாமலை
- திருமிகு. பிஜு அண்ணா
- திருமிகு. கௌதமன்
- திருமிகு. ஹீனா நந்தினி
- திருமிகு. சௌராவிஸ்லிஜா ஜான்
- திருமிகு. ஈவ்லின் மாசிலாமணி
- சிறந்த 1999-2004ஆம் ஆண்டு சீடு தொண்டர்கள்



## மதுரை சீடு - இன் நன்றிகள்

★17 ஆண்டுகளாய் திரு.கார்த்திக் பாரதியிடம் வளர்ந்து மதுரை சீடு நிறுவனத்திற்கு துணை நிற்கும் கரும்பாலை குழந்தைகள் மற்றும் இளைஞர்கள்

திருமிகு. பாரி கணேசன் மற்றும் அவரது நண்பர்கள்

திருமிகு. சந்திரமோகன் மற்றும் அவரது நண்பர்கள்

திருமிகு. வேலுமணி

திருமிகு. மாரீஸ்வரி - சங்கர்

திருமிகு. முருகேஸ்வரி

திருமிகு. வே. கருப்பையா

திருமிகு. அமுதா ராஜ சேகர்


திருமிகு. மீனாள் மணி சோவை

திருமிகு. செல்வி ஆசிரியை

சுவிஸ் குழந்தைகள்

திருமிகு. இசபெல் - ஜிம்

திருமிகு. கிறிஸ்டினா ஹார்பெண்டர்



## ஜீலை - 2007

1-07-07 தொண்டர் ஹீனா செந்தமிழ் நூலக அரங்கிற்கு வருகை தந்தார். 150 குழந்தைள் கூடியிருந்த கூட்டத்தினை கலந்துரையாடல் நிகழ்வாக நடத்தினார். பாடல்கள் கற்றுத் தந்து குழந்தைகளை உற்சாகப்படுத்தினார்.

3-07-07 தொண்டர் ஹீனாநந்தானி அறிவித்த கட்டுரை எழுதும் போட்டிகள் VII முதல் XII வரை உள்ள குழந்தைகளுக்கும். ஓவிய போட்டிகள் I முதல் VI வரை உள்ள குழந்தைகளுக்கும் நடைபெற்றன.

8-07-07 வாண்டுகள் அரங்க குழந்தைகள் 40 பேர் தொண்டர் மோகன் தலைமையில் நடைபெற்ற நடன வகுப்புகளில் கலந்து கொண்டனர்.

வேர்கள் அரங்க குந்தைகள் தொண்டர்கள் முருகபாண்டி, முனியசாமி தலைமையில் முகமூடிகள் செய்தல் பயிற்சியில் ஈடுபட்டு முகமூடி செய்து அசத்தினர்.

கனவுகள் அரங்க குழந்தைகள் 40 பேர் உலகமயமாதல் குறித்து இயக்குநர். முத்துக்குமாரிடம் பயிற்சி செய்தனர்.

10-07-07 தொண்டர் அன்பரசன் பிறந்தநாளை குழந்தைகள் மகிழ்வுடன் கொண்டாடி மகிழ்ந்தனர். பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

14-07-07 கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. நடத்தியவர் தொண்டர் K. அன்பரசன்

15-07-07 காமராசர் பிறந்த தினம் கல்வி வளர்ச்சி தினமாக சீடு அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி தலைமையில் நடத்தப்பட்டது. நமது XI மாணவர் சரவணக்குமார் காமராஜர் பேரவையின் பரிசினை பெற்றார். சீடு குழந்தைகள் அன்றைய தினம் பல பரிசுகளை பெற்று வந்தனர்.

16-07-07 கனவுகள் அரங்க குழந்தைகள் நடன வகுப்புகளில் பங்கேற்றனர்.

17-07-07 சுவிட்சர்லாந்து நாட்டு தோழி பெபியா சீடு டிரஸ்ட்-க்கு வருகை தந்தார். அவர் தேடல் அரங்க கல்லூரி மாணவர்களிடம் இந்தியப் பண்பாடும். சுவிஸ் பண்பாடும் என்ற தலைப்பில் உரையாற்றினார். அன்றைய தினம் தேடல் அரங்க இளைஞர்கள் அறுசுவை மதிய உணவு உண்டு மகிழ்ந்தனர்.

20-7-07 வேர்கள் அரங்கத்தில் சமையல் நாள் நடைபெற்றது. திரு. கார்த்திக் பாரதி அவர்கள் தலைமையில் குழந்தைகள் கூட்டாஞ்சோறு உண்டு மகிழ்ந்தனர்.

21-07-07 இன்று சீடு குழந்தைகள் ஓவிய படைப்பாக்கங்களில் ஈடுபட்டனர். செனி மையத்தில் தோழி. பெபியாவுடன் சந்திப்பு நடைபெற்றது. சீடு தொண்டர்கள் பங்கு கொண்டனர்.

22-07-07 இன்று காலை உடையலங்கார போட்டிகள். நடைபெற்றன. ஏராளமான குழந்தைகள் பங்கேற்றனர். சிறப்பிடம் பெற்ற குழந்தைகள் பாராட்டைப் பெற்றனர். மதியம் வேர்கள் அரங்க குழந்தைகள் தேவராட்ட பயிற்சியில் ஈடுபட்டனர். இன்று ஒருநாள் முகாமாக அய்யர்பங்களா முதியோர் இல்லத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் கனவுகள் அரங்க குழந்தைகளும். தேடல் அரங்க இளைஞர்களும் பங்கு கொண்டு சமூக சேவை செய்தனர்.

25-07-07 ஆஷா தொண்டர் திருமிகு. மெல்லி அண்ணாமலை இன்று சீடு-க்கு வருகை தந்தார். பாரம்பரிய இசையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. குழந்தைகள் சீடு-ன் பல்வேறு நடவடிக்கைகளை விவரித்தனர். கலந்துரையாடலும். கேள்வி பதில் நிகழ்ச்சிகளும்நடைபெற்றன. இன்று காலை மெல்லி அண்ணாமலை அவர்களும். A.S.கார்த்திக் பாரதியும் விடியல் மையத்தினை பார்வையிட்டனர்.

மதியம் மெல்வி அக்காவும், சீடு தொண்டர்களும் சிறப்பான அறுசுவை மதிய உணவு உண்டு மகிழ்ந்தனர்.

மாலை மொழியியல் அறிஞர் அண்ணாமலையும், அவரது துணைவியார் நாகம்மையும் கனவுகள் அரங்கத்திற்கு வருகை தந்து எதிர்கால கனவுகளும் இலட்சியங்களும் என்ற தலைப்பில் கலந்துரையாடினர்.

26-07-07 அமெரிக்கன் கல்லூரி Visual Communication துறை சார்பாக நடைபெற்ற நடிகர் நாசர் அவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வில் கனவுகள் அரங்க குழந்தைகள் மற்றும் தேடல் இளைஞர்கள் பங்கு கொண்டு மாற்று சினிமா குறித்த அறிவை பெற்றனர்.

28-07-07 இன்று மாலைமெல்வி அக்கா, மன்சூர், கார்த்திக்பாரதி மற்றும் முத்துக்குமார் போன்றோர் கலந்து கொண்டசீடு நிறுவன மேம்பாட்டு கூட்டம் நடைபெற்றது.

இன்று இரவு சென்னை சீடு நண்பர் இன்ஜினியர் செந்தில்குமார் சீடு அரங்கங்களை பார்வையிட்டார். கனவுகள் அரங்க குழந்தைகளிடம் ஆளுமை மேம்பாடு குறித்தும் தமது பொறியியல் கல்லூரி அனுபவங்களைக் குறித்தும் கலந்துரையாடினார்.

29-07-07 சீடு கனவுகள் அரங்க குழந்தைகளும், வேர்கள் அரங்க குழந்தைகளும் நத்தம் அருகே உள்ள சத்திரப்பட்டி ஓடைக்கு ஒருநாள் சிற்றுலா சென்று வந்தனர்.

**ஆகஸ்ட் - 2007**

3-8-07 சீடு குழந்தைகளுக்கு குழந்தை அட்சயா சார்பில் கேக்குகள் வழங்கப்பட்டன.


4-8-07 அமெரிக்கன் கல்லூரி சமூகப்பணித்துறை மாணவர் ப்ரவீன் கனவுகள் அரங்க குழந்தைகளுடன் எதிர்காலக் கல்வி என்ற தலைப்பில் கலந்துரையாடினார்.

.5-08-07 இன்று சீடு-ல் சிறப்பு நிகழ்வாக சீடு ஆதரவாளர்கள் சார்பில் மதிய உணவு 150 பேருக்கு வழங்கப்பட்டது.

6-8-07 இன்று மாலை சீடு நண்பர் சந்திரமோகன் சீடுக்கு வருகை தந்தார். கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு நகரியல் வாழ்வும், சென்னை நிலையும் என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

11-08-07 மதுரை அருகே நத்தம் சாலை கரும்பாலை முதல் கடவூர்வரை உடல் நலன் சார்ந்த விழிப்புணர்வுக்கான சைக்கிள் பேரணியை கனவுகள் அரங்க குழந்தைகள் 25 பேர் நிகழ்த்தினர்

15-08-07 இந்திய சுதந்திரத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை போற்றும் விதமாக நாட்டு விடுதலைக்காக பாடுபட்ட தலைவர்களை நினைவு கூர்தல், கொடியேற்றுதல் போன்றன சீடு அறக்கட்டளையில் நிகழ்ந்தன. இன்று காலை 7-30 மணிக்கு நிகழ்ந்த நிகழ்வில் சீடு குழந்தைகள் பேரவை தலைவர்கள் M.சுரேஷ்ராஜன் மற்றும் கற்பக ஜோதி ஆகியோர் சுதந்திர தின கொடியேற்றி இனிப்புகளை வழங்கினர்



மாலை 6-00 மணியளவில் சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூறும் புகழ் அஞ்சலி ஊர்வலம் நடத்தப் பெற்றது. 500க்கும் மேற்பட்ட குழந்தைகள் மெழுகுவர்த்தியுடன் இந்நிகழ்வில் பங்கு கொண்டனர்.

18-8-07 மதுரை சத்திரப்பட்டி முல்லை பெரியாற்று ஓடைக்கு சுமார் 30 வேர்கள் அரங்க குழந்தைகள் சிற்றுலா சென்று வந்தனர்.

19-8-07 விடியல் அழைப்பை ஏற்று விடியல் ஆண்டுவிழா காண சீடு குழந்தைகள் சென்று வந்தனர்.

30-8-07 இன்று சீடு ஆதரவாளர்கள் சார்பாக இரவு உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டது. பின்பு வான்முகில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**செப்டம்பர் 07**

4-9-2007 இன்று, கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு, கரும்பாலை இளைஞர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக கரும்பாலை கிழக்கு தெருவில் மாபெரும் உறியடிக்கும் திருவிழா நடைபெற்றது. இந்த மாபெரும் போட்டியில் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு உறி அடித்தனர். இரவு 9-30 மணியளவில் தல்லாகுளம் கிருஷ்ணன் கோவிலுக்குச் சென்று, அங்கு நடைபெற்ற திருவிழா நிகழ்வுகளை கண்டு ரசித்தனர்.

5-9-07 இன்று, ஆசிரியர் தினவிழாவானது கனவுகள் அரங்கத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சக ஆசிரியத் தொண்டர்களை குழந்தைகள் அனைவரும் வாழ்த்தி, பேசி மகிழ்வுற்றனர்.

8-9-07 இன்று, சனிக்கிழமை, கப்பலூரில் குழந்தைகள் பங்கேற்பிற்கான கூடுகை நடைபெற்றது. சீடு அறக்கட்டளையின் பிரதிநிதிகளாக கனவுகள் அரங்க மாணவர்களான மகுடபதி மற்றும் பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

9-9-07 இன்று அனைத்து அரங்கக் குழந்தைகளும், அரங்கங்களின் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

10-7-07 இன்று சீடு நண்பர்களான திருமிகு. ஐக்கு, இனா, இவிலின் ஆகியோர் மையத்திற்கு வருகை புரிந்தனர். அவர்களிடம் சீடு அறக்கட்டளை மற்றும் அதன் குழந்தைகளைப் பற்றியும், சீடு நடவடிக்கைகள் பற்றியும் விளக்கி கூறப்பட்டது.

11-9-07 இன்று, அனைத்து குழந்தைகளுக்கும் காலாண்டுத் தேர்வு தொடாங்கியது. அதற்கான ஆயத்த வேலைகளில் குழந்தைகள் ஈடுபட்டிருந்தனர்.

15-9-07 இன்று, சீடு பல் சமய கொண்டாட்ட குழு சார்பாக, மையத்தில் விநாயகர் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்கு சுண்டல், கொழுக்கட்டைகள் போன்றவை வழங்கப்பட்டது. சீடு மையத்திற்கென்று சில விளையாட்டுப் பொருட்கள் வாங்கப்பட்டன.

16-9-07 இன்று ராஜாஜி பூங்கா - ஒரு நாள் சிற்றுலாவில் வாண்டுகள் மற்றும் வேர்கள் அரங்கக் குழந்தைகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

18-9-07 இன்று, பெண் குழந்தைகளுக்கானகனவுகள் அரங்கம் திறக்கப்பட்டது. சீடு நண்பர் திருமிகு. பாரி கணேசன் அவர்களின் தந்தை திருமிகு. பாண்டியன் அவர்கள் கலந்து கொண்டு அரங்கத்தைத் திறந்து வைத்தார். கலை நிகழ்வுகளும் சிறப்பாய் நடைபெற்றன.

24-9-07 இன்று, கனவுகள் அரங்கக் குழந்தைகள் அனைவரும் அதிசயம் - மனமகிழ்வு பூங்காவிற்குச் சென்றனர். அவர்கள் தங்கள் பொழுதினை மிகவும் இனிமையாகவும், மகிழ்வுடனும் கழித்தனர்.

26-9-07 இன்று, சீடு குழந்தைகள் அனைவரும் தல்லாகுளம் மாரியம்மன் திருக்கோவிலுக்குச் சென்று வலதாடி (கும்மி) ஆட்டத்தைக் கண்டு ரசித்தனர்.

27-9-07 இன்று, வியாழக்கிழமை, சென்னையில் குழந்தைகள்பங்கேற்பிக்கான கூடுகை நடைபெற்றது. சீடு அறக்கட்டளையின் பிரதிநிதியாக கனவுகள் அரங்க மாணவர் பாண்டியராஜன் கலந்து கொண்டார்.

29-9-07 இன்று, கார்த்திக் அண்ணன் மற்றும் முத்துக்குமார் அண்ணன் தலைமையில் ஆசிரியத் தொண்டர்கள் சுற்றுலாவாக கேரளா சென்றனர்.

30-9-07 இன்று, சீடு அறக்கட்டளையின் சார்பாக குட்லாடம்பட்டியில் நடைபெற்ற மலையேறும் பயிற்சியில் வேர்கள் மற்றும் கனவுகள் அரங்கக் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

## அக்டோபர் -07

1-10-07 இன்று, விடுமுறை நாள் என்பதால் சீடு கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு ×. படம் திரையிட்டு காண்பிக்கப்பட்டது. பின்னர் அதையொட்டி குழு விவாதமும் நடைபெற்றது.

2-10-07 இன்று காந்தி ஜெயந்தி என்பதால் தொண்டர் முருகபாண்டி வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு காந்தி பற்றிய பாடல்களை கற்றுத் தந்தார். மாலை 6-00 மணியளவில் மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் புகழ் பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தன் காந்தியும், டால்ஸ்டாயும் என்ற தலைப்பில் உரையாற்றினார். சீடு குழந்தைகள் திரளாக கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

3-10-07 இன்று காந்தி மியூசியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காந்தியின் கொள்கைகளைப் பற்றி திரு. இளம்பிறை மணிமாறன் அவர்கள் பட்டிமன்றம் நடைப்பெற்றது. இவ்வுரையில் சீடு குழந்தைகளின் பேச்சாற்றலுக்குரிய பயிற்சியாக அமைந்தது.

4-10-07 காந்தியத்தை பின்பற்றுவதில் உள்ள இடர்பாடுகளைப் பற்றி ஞானசம்பந்தன் அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. விவாதத்திறமை, பதிலளிக்கும் திறமை, சந்தர்ப்ப வாய்ப்புக்கேற்ற திறமை இவற்றை இன்று கற்றுக் கொண்டனர்.

5-10-07 காந்தி மயூசியத்தில் திரு.ரா. மோகன் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றம் குழந்தைகளின் அறிவு பசிக்குரிய தீனியாக இருந்தது.

6-10-07 காந்தி மியூசியத்தில் சாலமன் பாப்பையா தலைமையில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சியைக் கண்டு நகைச்சுவையால் சிந்திக்க வைக்கும் திறமையை இன்று வளர்த்துக் கொண்டனர்.

7-10-07 இன்று மையத்திற்கு சீடு நண்பர்களான இசபெல்லா மற்றும்ஆனந்த் ஆகியோர் வருகை புரிந்தனர். அவர்கள் அனைத்து அரங்கங்களையும் பார்வையிட்டனர். அவர்களுக்கு மைய செயல்பாடுகள் மற்றும் மைய நிகழ்வுகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

14-10-07 இன்று மையத்தில், பல்சமய விழாக் குழுவினரின் சார்பாக, ஈத் பெருநாள் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. குழந்தைகள் தம் சக நண்பர்களிடமும், தொண்டர்களிடமும் வாழ்த்துக்கள் கூறி மகிழ்ந்தனர்.

20-10-07 இன்று பல்சமய விழாக் குழுவினரின் சார்பில் மையத்தில் சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுத பூஜை மிகுந்த மகிழ்வுடன் கொண்டாப்பட்டது. கூட்டு பிரார்த்தனை முடிந்த பிறகு, குழந்தைகளுக்கு பொரி, சுண்டல், பழங்கள் போன்றவை வழங்கப்பட்டன.

21-10-07 இன்று பிரௌனி அண்ணா வீட்டுத் திருமண நிகழ்வான எட்வின் அண்ணாவின் திருமணத்திற்கு, மையத்திலிருந்து சீடு குழந்தைகள் சென்றனர்.

28-10-07 இன்று சுட்டி விகடன் - இதழ்களில் வந்த செய்முறை மாதிரி உருவங்களை குழந்தைகள் செய்து, அவற்றை அனைவரின் பார்வைக்கு வைத்தனர். சிறப்பு விருந்தினர்களான திருமிகு. இசபெல்லா மற்றும் அவர்களது நண்பர்களும் வந்து பார்வையிட்டனர்.

29-10-07 இன்று திரு. இராதாகிருஷ்ணன் அண்ணா மையத்திற்கு வருகை புரிந்தார். மையத்தின் உபயோகத்திற்கு தனியாக ஒரு சி. டி. பிளேயர் வாங்கப்பட்டது.

**நவம்பர் -07**

6.11.07 தீபாவளி திருநாளை ஒட்டிய கொண்டாட்டங்கள் கரும்பாலை சமுதாயக கூடத்தில் நடைபெற்றன. TVS பள்ளி ஆசிரியர் திரு. நாகராஜன் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு அறிவுரைகளை வழங்கினார். இசபெல்லா மற்றும் பாண்டிச்சேரி நண்பர் ஆனந்த் தீபாவளி வாழ்த்துகள் கூறினார். பட்டாசுகள் வழங்கப்பட்டன. இனிப்புகள், பட்டாசுகள், கலைநிகழ்ச்சிகள் என்று சீடு தீபாவளி கொண்டாட்டம் மறக்கமுடியாத நிகழ்வாக அமைந்தது.

8.11.07 இன்று குழந்தைகள் தீபாவளி திருநாளை அவரவர் இல்லங்களில் கொண்டாடினார். குழந்தைகள் அனைவரும் தாங்கள் வீட்டு இனிப்புகளை சீடு அரங்கங்களுக்கு கொண்டு வந்து பகிர்ந்து கொண்டனர். பட்டாசுகள் வெடித்து கொண்டாடினார்.

10.11.07 பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் கூட்டமைப்பின் மாவட்ட கூட்டம் வலையங்குளத்தில் நடைபெற்றது. நமது மையத்திலிருந்து 4 குழந்தைகள் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

14.11.07 இன்று குழந்தைகள் தினவிழாவை முன்னிட்டு குழந்தைகள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி இனிப்புகள் வழங்கப்பட்டன. மாலை விடியல் நிறுவனம் காந்திமியூசியத்தில் நடத்திய கலைநிகழ்ச்சிகளில் சீடு குழந்தைகள் சிறப்பு பார்வையாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

17.11.07 கார்த்திக் அண்ணனின் தந்தையும், சீடு ஆலோசகருமான திருமிகு. அர்ஜுனன் காலமானதை அடுத்து சீடு அறக்கட்டளை சார்பாக 5நாள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. கார்த்திக் அண்ணனின் தந்தை சீடுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். பல உதவிகள் செய்துள்ளார். அவரது மரணம் சீடுக்கு பெரும் இழப்பாகும்.

24.11.07 கார்த்திகை பண்டிகை கொண்டாடப்பட்டது. அனைத்து அரங்கங்களும் தீப ஒளியில் மிதந்தன.

25.11.07 குழந்தைகள் உரிமை மீதான விழிப்புணர்வு பயிலரங்கு நடைபெற்றது. குழந்தைகள் பேரவை தலைவர் மகுடபதி குழந்தைகள் உரிமை பற்றி பேசினார். அதையொட்டி விவாத அரங்கும் நடைபெற்றது.

28.11.07 இன்று மாலை 7-00 மணியளவில் அனைத்து அரங்களிலும் குழந்தைகள் படைப்பரங்கம் என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. குந்தைகள் அனைவரும் முன்வந்து தத்தமது திறமைகளை வெளிப்படுத்தினர். அவர்களுடைய திறமைகளை கண்டறியக்கூடிய ஒரு வாய்ப்பாகவும், மகிழ்ச்சியான நிகழ்வாகவும் இந்த படைப்பரங்கம் அமைந்தது.

**டிசம்பர் 07**

1-12-07 இன்றைய நாள் எய்ட்ஸ் விழிப்பணர்வு தினம் என்பதால், ஓர் எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வை தொண்டர் சரண்யா நடத்தினார்.

2-12-07 இன்று அனைத்து குழந்தைகளுக்கும் பெரியார் படம் திரையிடப்பட்டது. அண்ணன் கார்த்திக்பாரதி படம் பற்றிய தன் பார்வையில் படம் பற்றிய புரிதல்களையும் விளக்கிச் சொன்னார். மேலும் மாணவர்கள் தங்களுக்கான புரிதல்களையும் விளக்கிச் சொன்னார்கள். அன்றைய நிகழ்வு கலந்துரையாடலாக நடைபெற்றது.

3-12-07 இன்று, வாண்டுகள் அரங்கக் குழந்தைகள் தங்களது படைப்புத் திறனை வெளிக் கொணரும் வகையில் நிறைய பாடல்களை எழுதினர். மேலும், புதிய பாடல்களை அவர்களும் கற்றுக்கொண்டனர்.

4-12-07 இன்று செந்தமிழ் நூலகத்தில் புத்தக வாசிப்பு நிகழ்ந்தது. கார்த்திக் அண்ணன் தலைமையில் ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன் நாவலை கூட்டு வாசிப்பாக வாசிக்கப்பட்டது. பின் நிகழ்ந்த விவாத அரங்கில் சீடு மூத்த குழந்தைகள் வெகு ஈடுபட்டுடன் கலந்து கொண்டனர்.

5-12-07 இன்று குழந்தைகளுக்கான நடன வகுப்புகள் நடைபெற்றன. சீடு-ன் நடன வடிவமைப்பாளர்களான மோகன், முனியசாமி, முருக பாண்டி ஆகிய தொண்டர்களின் தலைமையில் நடனங்கள் கற்றுத் தரப்பட்டன.

6-12-07 இன்று குழந்தைகளின் ஆளுமைத் திறனை மேம்படுத்தும் வகையிலான ஆளுமைத்திறன் பற்றிய பயிற்சி பட்டறைகள் நடத்தபப்பட்டன. இந்நிகழ்வில் தொண்டர் R.கார்த்திக் ஆளுமைப் பற்றியும், அதை வளர்த்துக் கொள்வது பற்றியும் பேசினார்.

7-12-07 இன்று கார்த்திக் பாரதி அண்ணன் தலைமையில் அறிவியலும் ஆன்மிகமும் என்றதலைப்பில் குழு விவாதம்நடைபெற்றது.

8-12-07 இன்று குழந்தைகளுக்கு ஏர்-பட் என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. இது ஓர் சிறிய நாய்க்குட்டியைப் பற்றிய கதை என்பதால் குழந்தைகள் மிகுந்த சந்தோஷத்துடன் கண்டு களித்தனர்.

9-12-07 இன்று அரையாண்டுத் தேர்வை முன்னிட்டு, சிறப்புப் பாட வகுப்புகள் துவங்கப்பட்டன.

10-12-07 இன்று குழந்தைகள் அரையாண்டுத் தேர்விற்கு ஆயத்தமாயினர்.

11, 20-12-07 பள்ளி அரையாண்டுத் தேர்வுகள் நடைபெற்றன.

20-12-07 இனிமையான விடுமுறை கொண்டாட்டங்களுக்காக திட்டமிடல்களில் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

21-12-07 இன்று மையத்தில் பக்ரீத் கொண்டாட்டம் கோலாகலமாக நடைபெற்றது. பக்ரீத் உருவான கதைப்பற்றியும், முஸ்லீம்களின் நம்பிக்கையைப் பற்றியும் தொண்டர் மன்சூர் அண்ணன் பேசினார்.


22-12-07 இன்று சீடு நண்பர்கள் திருமிகு. சக். ஆண்டர்சன், கிறிஸ்டின் ஆகியோர் மையத்திற்கு வருகை புரிந்தனர். யானை ஊர்வலத்துடன் சீடு குழந்தைகள் புடை சூழ அவர்கள் கோலாகலத்துடன் வரவேற்றப் பட்டனர்.

23-12-07 குழந்தைகளுக்காக இன்று சார்லி சாப்ளினின் மாடர்ன் டைம்ஸ் படம் திரையிடப்பட்டது. இதனையொட்டி தொழிற்புரட்சிப் பற்றியும், அதன் விளைவுகளைப் பற்றியும் விளக்கி கூறப்பட்டது.

24-12-07 இன்று கிறிஸ்துமஸ் தாத்தா ஊர்வலம் நடைபெற்றது. சீடு குழந்தைகளின் வீடுகளுக்குச் சென்று இனிப்புகள் வழங்கப்பட்டன.

25-12-07 இன்று மையத்தில் கிறிஸ்துமஸ் தினம் கொண்டாடப்பட்டது. மேலும், ஆண்டு விழா கலைநிகழ்விற்கானக் கோலாட்டப் பயிற்சியில் குழந்தைகள் ஈடுபட்டனர்.

27-12-07 இன்று மார்கழி உற்சவம் என்ற பெயரில், சீடு குழந்தைகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் எட்டாமாண்டு நிறைவை ஒட்டி கலை நிகழ்வு நடத்தப்பட்டது. கிறிஸ்டின், சக், ஆண்டர்சன் மற்றும் கெல்சி ஆகியோர் விருந்தினர்களாக வந்து கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். மேலும் மையத்தைப் பற்றியும் மைய நிகழ்வுகளைப் பற்றியும் அவர்களுக்கு விளக்கப்பட்டது.



28-12-07 இன்று FPCP மாநாட்டிற்குச் செல்வதை முன்னிட்டு, குழந்தைகள் தயாரானார்கள்.


29-12-07 இன்று கனவுகள் அரங்க பெண் குழந்தைகளும், தொண்டர்களும் கார்த்திக் அண்ணன் மற்றும் மன்சூர் அண்ணன் தலைமையில் அதிசயம் மனமகிழ்வுப் பூங்காவிற்குச் சென்றனர். 10 குழந்தைகள், 3 இளைஞர்கள், குழந்தைகள் - பங்கேற்புரிமைப் பற்றிய மாநாட்டிற்குச் சென்று கலந்து கொள்ள சென்னைக்குச் சென்றனர்.

31-12-07 இன்று கடவூரில் பழங்குடியினர் பண்பாட்டுக் கலை விழா கொண்டாடப்பட்டது. பழம்பண்பாட்டை நினைவுப்படுத்தும் வகையில் பாடல் பாடியும், நடனம் ஆடியும் மலையேறியும் சமைத்தும் உண்டும் கொண்டாடினர்.

**ஜனவரி - 08**

1-1-08 புத்தாண்டு கொண்டாட்டங்கள்

இன்று காலை குழந்தைகள் அனைவரும் தங்களுக்குள் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.



மாலை சமுதாயக் கூடத்தில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் துவங்கின. அனைத்து வகுப்பு குழந்தைகளுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மொத்தத்தில் புத்தாண்டு தொடக்கம் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமாக அமைந்தது. திருமிகு. காயத்ரி, முத்துக்குமார், மற்றும் முருகன் ஆகியோர் விருந்தினராக கலந்து கொண்டனர்.

2-1-08 புத்தாண்டு தொடங்கியதையொட்டி இந்த ஆண்டிற்கான குழந்தைகள் மாமன்ற தேர்தல் நடைபெற்றது. சீடு குழந்தைகள் பேரவையின் பொறுப்பாளர்களாக எம்.மகுடபதி மற்றும் என்.நாகலெட்சுமி தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு அரங்கங்களுக்கும் செயலாளர்கள், தலைவர்கள் முதலானோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

4-1-08 சீடு அறக்கட்டளையின் அறங்காவலர்கள் கார்த்திக் பாரதி மற்றும் அன்பரசன், ஒருங்கிணைப்பாளர் மன்சூர் அலி, தொண்டர் கார்த்திக் ஆகியோர் ஆஷா தொண்டு நிறுவனம் கும்பகோணத்தில் நடத்திய தேசிய அளவிலான மாநாட்டில் கலந்து கொண்டனர். சீடு அறக்கட்டளையின் நடவடிக்கைகள் தெரிவிக்கப்பட்டன. சீடுவின் பெருமை இந்தியா முழுமைக்கும் பரப்பப்பட்டது.

13-1-08 பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகளின் கூட்டமைப்பின் மதுரை மாவட்ட கூட்டம் சீடு அறக்கட்டளை சார்பாக சமுதாய கூடத்தில் நடைபெற்றது. தேவையான வசதிகள் அனைத்தும் நமது நிறுவனம் சார்பாக செய்யப்பட்டிருந்தது. நமது மைய தொண்டர் ஆர்.கார்த்திக் உணவும் ஆரோக்கியமும் என்ற தலைப்பில் உரையாற்றினார்.


14-1-08 செசி மையத்தை சேர்ந்த பிஜ்ஜு அண்ணன் நமது மையத்திற்கு சுவிட்சர்லாந்தை சேர்ந்த நான்கு பார்வையாளர்களை அழைத்து வந்திருந்தார். அவர்களுக்கு சீடு நடவடிக்கைகள் தெரிவிக்கப்பட்டன. பின்னர் பொங்கல் விழாவையொட்டி தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற தமிழக அரசு சுற்றுலா விழாவிற்கு சீடு இல் உள்ளோர் சென்றனர். போலந்து, ஜெர்மனி நண்பர்கள் இவர், ருடல்ப், சபீனா, ஈவா போன்றோர் வந்திருந்தனர்.

22-1-08 இசபெல்லா என்ற சுவிஸ் பார்வையாளர் மையத்திற்கு முன்னமே பலமுறை வருகை தந்துள்ளார் இன்றும் அவர் வருகை தந்து குழந்தைகளுடன் உரையாடினார். குழந்தைகள் அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற Am Fest கலை நிகழ்ச்சிக்கு சென்று வந்தனர்.

23-1-08 சுவையான இரவு உணவு முத்துக்குமார் அண்ணன் குடும்பத்தினரால் அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டது.

25-1-08 சிலம்ப கோலாட்டம் என்ற புதிய கலையை கற்றுக் கொடுக்க திருவாரூர் ஜெகந்நாதன் என்ற கலைஞரும், அவருடைய மாணவர் சத்ஷ் சீடு-க்கு வருகை தந்தனர்.

26-1-08 காலை குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. தேசியக் கொடியை குழந்தைகள் பேரவை தலைவர் மகுடபதி ஏற்றி வைத்து வாழத்துகள் கூறினார். மேலும் சீடு குழந்தைகள் பேரவை, சீடு இளைஞர் பேரவை, சீடு மைய கொடிகளும் ஏற்றப்பட்டன.



காலை 10-00 மணியளவில் கரும்பாலை பள்ளியில் சிலம்ப கோலாட்ட பயிற்சி முகாம் நடைபெற்றது. அனைவரும் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டனர்.

மாலை 6-00 மணியளவில் மன்சூர் அண்ணன் திருமணத்தையொட்டி கார்த்திக் அண்ணன் இரவு விருந்து நடத்தினார். குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு திருமண வாழ்த்துக்கள் கூறினார்கள்.

27-1-08 சம்பக்குடி சமணர்மலை அடிவாரத்தில் சிலம்ப கோலாட்ட பயிற்சி தொடர்ந்தது. மாலையில் ஜெகந்நாதன் ஐயாவிற்கு குந்தைகள் பிரியா விடை அளித்தனர்.

28-1-08 தொண்டர் மன்சூர் அண்ணன் திருமணம் நடைபெற்றது. அ.ச.கார்த்திக் பாரதி தலைமையில் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

15-1-08 தமிழர் திருநாளையொட்டி குழந்தைகள் அனைவருக்கும் பொங்கல் சமைக்கப்பட்டு பரிமாறப்பட்டது. காலை குந்தைகள் அனைவரும் தங்கள் கைகளில் கரும்புகளை ஏந்தியபடி, பொங்கல் வாழ்த்துகள் கூறிக் கொண்டு வீதிகளில் ஊர்வலமாக சென்றனர்.

**பிப்ரவரி - 08**

1-2-08 இன்று சீடு நிறுவன நாளாகும். நிறுவன நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. மேலும் காலை 7-00 மணியளவில் கார்த்திக் அண்ணன் குழந்தைகள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். சீடு நிறுவன கொடி ஏற்றப்பட்டது.

3-2-08 பத்தாம் வகுப்பில் பள்ளி அளவில் மொத்த மதிப்பெண்களில் முதலிடம் பெற்ற சரவணக்குமாருக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன. பள்ளி அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்றவர்களை பாராட்டி சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டு ஒட்டப்பட்டன.

5-2-08 அமெரிக்கன் கல்லூரி நடனக்குழு உறுப்பினர் சத்ஷ் அவர்கள் மையத்திற்கு வருகை தந்து தனது நடனத் திறமைகளை வெளிக்காட்டினார். அனைவரும் வியந்து போயினர். மேலும் வாண்டுகள் அரங்க குழந்தைகள் தாங்களே தயாரித்த பாடல்களைப் பாடி அனைவரையும் அசத்தினர்.

6-2-08 இசபெல் அவர்கள் வருகை தந்து தேடல் இளைஞர்களிடம் பேசி மகிழ்ந்தார். ஒற்றுமை பேரவையின் தலைவர் பி.வி.ராஜகோபால் காந்திமியூசியத்தில் உரையாற்றினார். மேலும் காந்தியவாதி சுப்பாராவ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரை குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் சந்தித்து வாழ்த்துக்கள் கூறினார்கள்.

7-2-08 காந்தி மியூசியத்தில் செசி மையம் நடத்திய மூன்றுநாள் தேசிய நாடக விழா நடைபெற்றது. சீடு அறக்கட்டளை தேடல் இளைஞர்கள் சார்பாக சிற்றுண்டி கடை ஒன்று செயல்பட்டது. முதல் நாளான இன்று சுப்பாராவ் அவர்கள் உரையாற்றினார்கள். பிறகு சென்னை கலைக்குழுவின் பிரளயன் இயக்கிய

நம்மால் முடியும் மற்றும் இடம் ஆகிய நாடகங்கள் நடைபெற்றன. மூன்று நாள் நாடக விழாவிலும் சீடு குழந்தைகள் திரளாக கலந்து கொண்டு நாடகங்களை ரசித்துப் பார்த்தனர்.

8-2-08 செசி தேசிய நாடக விழாவின் இரண்டாம் நாளான இன்று சண்முக ராஜா மற்றும் மிரர்லியேவின் சிப்பிசங், முத்து லட்சுமண ராவ் குழுவினரின், அம்பேத்கர் தோல் பாவைக் கூத்து, சண்முகராஜாவின் திருப்பிக் கொடு ஆகிய மூன்று நாடகங்கள் நடைபெற்றன. நமது குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு நாடகங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

9-2-08 நாடக விழாவின் கடைசிநாளான இன்று வேலு சரவணனின் கடல் பூதம், தேசிய நாடகப்பள்ளி மற்றும் சண்முகராஜாவின் குதிரை முட்டை நிகழ் கலைக்குழு, பிரிகேட் ரேவலின் வாழும் வரை என்ற பொம்மலாட்ட நாடகம் ஆகியவை அரங்கேற்றப்பட்டன.

10-2-08 பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகளின் கூட்டமைப்பின் மண்டல கூட்டம் முத்துப்பட்டியில் நடைபெற்றது. மாணவன் பாண்டியராஜன் கலந்து கொண்டான். மாலையில் தொண்டர். கௌதமன் மையத்திற்கு வருகை தந்தார். சில குறுந்தட்டுகளை அன்பளிப்பாக வழங்கினார்.


13-2-08 தொண்டர். பெரியசாமி தனது பிறந்த நாளை முன்னிட்டு குழந்தைகள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். கனவுகள் அரங்க குழந்தைகள் தேவராட்ட மற்றும் தப்பாட்ட பயிற்சி பெற்றனர்.

14-2-08 தேவராட்டம், தப்பாட்டம், கோலாட்டம், சிலம்ப கோலாட்டப் பயிற்சிகள் நடைபெற்றன. வான்முகில் கலை விழாவிற்கான அழைப்பிதழ்கள் தயாரிக்கப்பட்டன. அனைவருக்கும் விழா பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

15-2-08 வான்முகில் கலைவிழாவிற்கான பயிற்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டது.

16-02-08 குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு கூட்டம் நடத்தப்பட்டது. கலைவிழாவிற்கான ஏற்பாடுகள் பற்றி பேசப்பட்டன. கலை விழாவிற்கான சுவரொட்டிகள் அச்சடித்து ஒட்டப்பட்டன. கார்த்திக் அண்ணன், மன்சூர் அண்ணன், அன்பு அண்ணன் மற்றும் பெண் தொண்டர்கள், பெண் குழந்தைகள் இரயில் நிலையத்திற்குச் சென்று லாரா மற்றும் ஜான் தம்பதிகளை வரவேற்றனர். காந்தி மியூசியத்திற்குச் சென்று தோரணம், மேடை , விளம்பரங்கள், பேனர் கட்டுதல் ஆகிய வேலைகளை செய்தனர்.

17-2-08 வான்முகில் கலைவிழா காந்திமியூசியத்தில் நடைபெற்றது. சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த சீடு அறக்கட்டளையின் முதன்மை ஆதரவாளர்களான லாரா, ஜான் தம்பதிகள் சிறப்பு விருந்தினராய் கலந்து கொண்டனர். திருவாரூர் ஜெகந்நாதன் ஐயா கலைக்குழு சார்பில் சிலம்பாட்டம் மற்றும் கரகாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் நமது குழந்தைகள் சார்பில் கோலாட்டம், தேவராட்டம், தப்பாட்டம், சிலம்ப கோலாட்டம், சிவன் காளி ஆட்டம், தீ ஆட்டம், பூச்சாண்டி ஆட்டம், மேற்கத்திய நடனம் மேலும் பல நாட்டுப்புற பாடல்கள் மற்றும் நாட்டுப்புற நடனங்கள் அடங்கிய கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.



உள்ளூர் தொலைக்காட்சி சேனல்கள் நிகழ்ச்சியை பதிவு செய்தன. தினகரன், தமிழ் முரசு, இந்து, மக்கள் முரசு, தினமலர் நாளிதழ்கள் நிகழ்ச்சியைப் பற்றிய செய்திகளை வெளியிட்டன.

18-2-08 லாரா, ஜான் தம்பதிகள் மற்றும், மகாத்மா பள்ளி ஆசிரியை சித்ரா மையத்திற்கு வருகை தந்தனர். அனைத்து அரங்கங்களையும் சென்று பார்த்தனர். குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக உரையாடினர்.

19-2-08 வான்முகில் கலைவிழா நிகழ்ச்சிகளை குழந்தைகள் குறுந்தட்டு மூலம் கண்டு இரசித்தனர்.

20-2-08 அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் சதீஷ் மற்றும் சக்திவேல் மையத்தினை பார்வையிட்டனர்.

21-2-08 வாண்டுகள் அரங்கத்தில் நாடகப்பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

22-2-08 அமெரிக்கன் கல்லூரி நண்பர் எக்கோன் (நாகலாந்து) மையத்தினை பார்வையிட்டார். எகோன் வேர்கள் அரங்கத்தில் ஆங்கில இலக்கணம் கற்றுத் தந்தார்.

23-2-08 வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு ஸ்டூவர்ட் லிட்டில் படம் திரையிடப்பட்டது.

24-2-08 Honey Well அலுவலகத்திலிருந்து பாரத் மற்றும் தண்டபாணி ஆகியோர் ஒவ்வொரு அரங்கங்களையும் பார்வையிட்டனர். குழந்தைகளுடன் உரையாடி மகிழ்ந்தனர்.

26-2-08 வாண்டுகள் அரங்கத்தில் ஓவியப் பயிற்சியும், கனவுகள் அரங்கத்தில் நடனப் பயிற்சியும் தொண்டர்களால் நடத்தப்பட்டன.

27-02-08 கார்த்திக் பாரதி அண்ணன், தொண்டர்கள், ஓ.மணிகண்டன், ஆர்பாஸ்கர் ராஜா, எம்.மாரிமுத்து, அரவிந்தர் அன்னையை வழிபடவும் ஆரோவில் 40ஆம் ஆண்டு விழாவில் பங்கேற்கவும் பாண்டிச்சேரி சென்றனர்.

28-02-08 வாண்டுகள் அரங்கத்தில் நாடகப் பயிற்சி வகுப்பும் கனவுகள் அரங்கத்தில் நடனப் பயிற்சி வகுப்பும் நடைபெற்றன.

29-2-08 இன்று வான்முகில் கலைவிழா பற்றிய கட்டுரை இந்து ஆங்கில நாளிதழில் வெளியானது. அதைப் படித்து அனைவரும் மகிழ்ந்தனர். அதை பொதுமக்கள் பார்வைக்காக வெளியே காட்சிக்கு வைக்கப்பட்டது.

**மார்ச் 2008**

1-3-08 வேர்கள் மற்றும் கனவுகள் அரங்கங்களுக்கு ஹாரிபட்டர் படம் திரையிடப்பட்டது.

2-3-08 12ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வுக்காக படித்தார்கள். அமெரிக்கன் கல்லூரியைச் சேர்ந்த விஜய் என்பவர் கரும்பாலை பகுதியில் உள்ள குழந்தை தொழிலாளர்களின் உரையாடி ஆய்வுக் கட்டுரை எழுதினார்.

3-3-08 காலை 8-00 மணிக்கு +2 மாணவர்கள் மையத்தில் பிரார்த்தனை செய்தார்கள். தேன்கூடு கணக்குகள் சரிபார்க்கப்பட்டன. இன்று +2 தேர்வுகள் துவங்கின.

4-3-08 தொண்டர்கள் கூட்டம் நடைபெற்றது. தொண்டர்கள் முருகபாண்டி, சரண்யா, அமுதா, கௌசல்யா ஆகியோர் அமெரிக்கன் கல்ரியில் நடைபெற்ற இசைநிகழ்ச்சிக்கு சென்று வந்தனர்.

5-3-08 அலுவலக கணக்குகள் சரிபார்க்கப்பட்டன. வாண்டுகள் அரங்கத்தில் வாசித்தல் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

8-3-08 வாண்டுகள் மற்றும் வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு டாம் அண்ட் ஜெர்ரி படம் திரையிடப்பட்டது. கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு தேர்வுகளை முன்னிட்டு சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

9-3-08 வாண்டுகள் அரங்க மாணவன் நமசிவாயத்திற்கு காதணி விழா நடைபெற்றது. குழந்தைகள் திரளாக கலந்து கொண்டு அன்பளிப்பு அளித்தனர். 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கப்பட்டது.

10-3-08 நமச்சிவாயம் குடும்பத்தினர் சார்பாக அனைத்து குழந்தைகளுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டன. வாண்டுகள் அரங்கத்தில் பாடல் வகுப்பு நடைபெற்றது.

11-3-08 லாரா அம்மா குழந்தைகளுக்கு எழுதிய கடிதம் வாசிக்கப்பட்டது. அவர்கள் நூலகத்திற்கு புத்தகங்கள் வழங்கப் போவதாக அக்கடிதத்தில் கூறியிருந்தார். இச்செய்தியைக் கேட்டவுடன் குழந்தைகள் மிக மகிழ்ந்தனர்.

12-03-08 வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு நடனப்பயிற்சியும் பாடல் பயிற்சியும் அளிக்கப்பட்டன.

15-3-08 வான்முகில் கலைவிழா நிகழ்ச்சிகளின் தொகுப்பை கனவுகள்அரங்க குழந்தைகள் கண்டு மகிழ்ந்தனர்.

20-3-08 வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு நடன வகுப்பும், பாட்டு வகுப்பும் நடைபெற்றது.

22-3-08 வாண்டுகள் மற்றும் வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு அனுமன், பரமார்த்த குரு கதைகள் ஆகிய படங்கள் திரையிடப்பட்டன. +2 மாணவர்களுக்கு முழுஆண்டுத் தேர்வு இன்று முடிந்தது. அவர்களுக்கு மதிய உணவு மையத்தின் சார்பாக அளிக்கப்பட்டது.

23-3-08 அனைத்து அரங்க குழந்தைகளும் தொண்டர்கள் உதவியுடன் தங்களது அரங்கங்களை சுத்தம் செய்தனர்.

25-3-08 இன்று சென்னையிலிருந்து ஆஷா நிறுவனத் தொண்டர் பாஸ்கர் அவர்கள் அனைத்து அரங்கங்களையும் பார்வையிட்டார். அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. குழந்தைகளுடன் கலந்துரையாடினார். அவருக்கு மைய நடவடிக்கைகள் தெரிவிக்கப்பட்டன. முன்னதாக அவர் தேடல் இளைஞர்களிடம் பல விஷயங்கள் பற்றி உரையாடினார்.

27-3-08 அமெரிக்கன் கல்லூரி நாள் விழாவிற்கு இளைஞர்கள் சென்றனர். அங்கு நடத்தப்பட்ட கலைநிகழ்ச்சிகள் மனதைக் கவர்ந்தன. பத்தாம் வகுப்பு தேர்வுகள் துவங்கின.

28-3-08 வாண்டுகள் அரங்கத்தில் நடன வகுப்பிலும், பாட்டு வகுப்பிலும் கற்றுக் கொண்டவற்றை தங்களுக்குள் அரங்கேற்றினர். மிகச் சிறப்பாக இந்நிகழ்ச்சியை நிகழ்த்தினர்.

29-3-08 கனவுகள் அரங்க இளைஞர்கள் தலித் கலைவிழாவிற்கு சென்றனர். அங்கு பல புத்தகங்களையும், குறுந்தகடுகளையும் வாங்கினர்.

30-3-08 கனவுகள் அரங்க இளைஞர்கள் வரதட்சணை ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஒத்தகடை சென்றனர். வரதட்சணை வாங்கக்கூடாது என்று உறுதி ஏற்றனர்.

31-3-08 வாண்டுகள் அரங்க குழந்தைகள் தாங்கள் கற்றுக் கொண்ட பாடல்களை எழுத்துகளாக பதிவு செய்தனர். வாசிப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

பதிவு : கே.அன்பரசன்
நிதி அரங்காவலர்

# நாளிதழ்களில் சீடு

தினமலர்
மதுரை



## ஏழை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்

தமிழ் முரசு
நம்பர் 1 மாலை நாளிதழ்

மதுரையில்

## வான்முகில் கலை விழா

திங்கட்கிழமை 18.2.2008
தினகரன்
மதுரை



வான்முகில் கலை விழா

## வெளிநாட்டு தம்பதிகள் ஆடிப்பாடி கொண்டாட்டம்

## 2007-2008

### வாண்டுகள் அரங்கம்









### வேர்கள் அரங்கம்









### கனவுகள் அரங்கம்









### தேடல்கள் அரங்கம்



### சிறு குழந்தைகள் பேரவை



V.வெற்றிராஜா



O.மோகன்





S.முருகபாண்டி
P.பழனிசாமி



M.தங்கலட்சுமி, P.பாண்டியராஜன்



N.நாகலட்சுமி



# *MADURAI SEED REMEMBERS YOU PROUDLY AND GRATEFULLY*



Dr. Taj Rajappa



Miss. V.Mariyammal



Mr. A.Arjunan



Dr. Melli Annamalai



Mrs. Heena Nandhani




Mrs. Evelin Masilamani



Mr. Biju



Mr. Parri Ganesan, B.E.



Mr. Aruul Thangaraj, B.E.


Contact :

**SEED TRUST**

Regd. No. 61/07

Support and Empower the underprivileged

Arjun Shanmuga Illam

439/1, East Street, Karumbalai,

Madurai - 625 020. Tamilnadu, Southern India.

Ph : 0452 - 6456503, Mobile : 9894805446, 92445 56503

E-mail : askb_seednarpanigal_2000@yahoo.co.in,
maduraiseed1599@gmail.com, seedchildren2000@yahoo.co.in




*This is the art of living, heart of seed family*

மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைகளுக்காகவும், வளமைக் கல்விக்காகவும் பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.